# முன்னுரை

—★—

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

நஹ்மதுஹூ வநுஸல்லீ அலா ரசூலிஹில் கரீம்

ஐந்து வேளையும் கடமையான தொழுகைகளை ஒன்று கூடி ஒருவரை இமாமாகக் கொண்டு மற்றவர்கள் அவரைப் பின்தொடர்ந்து தொழும் தொழுகைக்கு ஜமாஅத் தொழுகை என்று கூறப்படுகின்றது.

கடமையான தொழுகையை தனியாக ஒருவர் தொழுவதைவிட ஜமாஅத்துடன் கூடித் தொழுவதால் அவருக்கு இருபத்தேழு மடங்கு நன்மை கிடைக்கின்றன.

மக்கள் ஜமாஅத்துடன் கூடித்தொழுவதால் அவர்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட வழியுண்டாகின்றது.

''ஒரு சாண் அளவு ஜமாஅத்தை விட்டுப் பிரிபவன் உண்மையிலேயே இஸ்லாமியப் பிடிக்கயிற்றைத் தன் பிடரியிலிருந்து கழற்றிவிட்டான்'' என்று அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளனர்.

அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா தன் திருமறையில் ''நீங்கள் அல்லாஹ்வின் ஒற்றுமை என்னும் கயிற்றைப்பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்! உங்களிடையே பிளவு ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம்.'' என்று கூறுகின்றான்.

எனவே ஜமாஅத் தொழுகையின் மூலம் முஸ்லிம் சமுதாயத்தினரிடையே ஒற்றுமை நிலவும் வாய்ப்பு ஒளிமயமாக உள்ளது என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

மேலும் இத்தகு கூட்டுத் தொழுகை மூலம் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு முஸ்லிம் சமுதாயத்தினரிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிறது.

மேலும் கூட்டுத் தொழுகையைப் பற்றி அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) குறிப்பிடும் பொழுது,

''வல் ஜமாஅத் கைரும் மினத்துன்யா வமா ஃபீஹா'' ''ஜமாஅத் என்னும் கூட்டுத் தொழுகையானது இவ்வுலகிதையும், இவ்வுலகிலுள்ள அனைத்தைக் காட்டிலும் சிறந்ததாகும்'' என்று கூறினார்கள்.

எனவே இத்தொழுகையின் சிறப்பையும், அவசியத்தையும் நாம் ஒவ்வொருவரும் புரிந்து விளங்கி செயல்படுதல் இன்றியமையாததாகும்.

# பொருளடக்கம்

—✶—


| | பக்கம் |
|---|---|
| அல்லாஹ்வின் ஆணை | 9 |
| ருகூஉ | 8 |
| அல்லாஹ் கூறுகின்றான் | 9 |
| ஸுஜூது | 10 |
| இமாமை முந்துதல் | 12 |
| இருபத்தைந்து மடங்கு நன்மை | 13 |
| தொலைவிலிருந்து ஜமாஅத்திற்கு வருதல் | 14 |
| ஜமாஅத்தை விடுவதற்கு அனுமதி உண்டா? | 16 |
| ஜமாஅத் தொழுகையை விடுவதற்கு மார்க்கம் வரையறுத்த எல்லைகள் | 17 |
| ஜமாஅத்துடன் தொழாதது ஏன்? | 19 |
| அனுமதி இருப்பின் ஜமாஅத்துடன் தொழுவதேசிறந்தது | 22 |
| அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஜமாஅத் தொழுகையில் காட்டிய ஆர்வம் | 23 |
| ஜமாஅத்தை புறக்கணிப்பவன் நயவஞ்சகனே | 27 |
| அண்ணலாரின் கண்டிப்பு | 31 |

ஏது மேலானது? தஹஜ்ஜுத் தொழுகையா?
ஃபஜ்ர் தொழுகையா? 31

ஜமாஅத் தவறியதால் அழுத பெரியார் 33

ஜமாஅத்தைப் பேணி நடந்த கூலிக்காரர் 34

ஜமாஅத்துடன் தொழுவது இராக் நாட்டு
ஆட்சியைக் காட்டிலும் மேலானது 37

ஜமாஅத்தை விட்டவருக்கு சவுக்கடி 41

அல்லாஹ்வின் அழைப்பும்,
அய்யூப் கானின் அழைப்பும் 44

ஜமாஅத்தை இழிவுபடுத்தும்
தூங்கு மூஞ்சிகள் 46

ஜமாஅத் தொழுகை எவர்மீது கடமை? 49


## ஜும்ஆ தொழுகையின் சிறப்புகள்


ஜும்ஆ என்றால் என்ன? 50

ஜும்ஆத் தொழுகையின் சிறப்புகள் 50

ஜும்ஆ யார்மீது கடமை? 51

ஜும்ஆவை விடுவதன் கேடுகள் 52




بسم الله الرحمن الرحيم

# ஜமாஅத் தொழுகையின் சிறப்பு

## அல்லாஹ்வின் ஆணை

அல்லாஹ் தன் திருமறையில்;

''தொழுகையில் (ஒன்று சேர்ந்து குனிந்து) ருகூஉ செய்பவர்களுடன் நீங்களும் (குனிந்து) 'ருகூஉ' செய்யுங்கள்.''

(அத் 2 வசனம் 43)

என்று கூறுகின்றான்.

அல்லாஹ்வின் இத்திருவசனத்தை நாம் அவனின் அருளுரை என்பதைக் காட்டிலும் அவனின் ஆணை என்று கொள்வதே சிறப்புடையது ஆகும்.

தொழுகையை இமாம் ஜமாஅத்துடன் முறைப்படி நிலை நிறுத்துவதால் இதயங்கள் மென்மையுறுகின்றன. உள்ளத்தின் உள்ளே நிறைந்து காணும் தீயபண்புகள் அகன்று விடுவதால் உள்ளம் தூய்மையடைகின்றது.

எனவே எவரும் தொழுகைகளைத் தங்கள் இல்லங்களில் தனித்தனியே தொழுது நிறைவேற்றி முடித்துக்கொள்ளக் கூடாது.

'ருகூஉ' செய்து தொழுபவர்களுடன் கூடிச் சேர்ந்து அணிவகுத்து அதனை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு செய்வதால் நமக்கு அனைத்து வகையான நற்பேறுகளும் ஞானப் பேரொளியும் கிட்டும்.

ருகூஉ என்ற பதத்திற்கு குனிதல் என்பது பொருளாகும்.

தொழுகையின் செயல்களில் மிக முக்கியமான இதனை அல்லாஹு தஆலா இந்தத் திருவசனத்தில் குறிப்பிட்டிருப்பதால் இதற்கு தொழுகை என்ற பொருளே கொள்ளப்படுகிறது.

சில இடங்களில் தொழுகையின் செயல்களில் மற்றொரு முக்கிய அங்கமான 'ஸுஜூது' குறிப்பிடப்படுகிறது. அப்பொழுது அங்கே 'ஸுஜூது' என்பதையும் தொழுகை என்பதாகவே கருத்து கொள்ளப் படுகின்றது. எவ்வாறு கூறிய போதினும் முழுத் தொழுகை என்பதுதான் கருத்தாகும்.

### ருகூஉ

'ருகூஉ' என்றால் குனிதல் என்பது பொருள் எனக் கண்டோம்.

'ருகூஉ' வில் நிற்கும் பொழுது ஷாஃபி மத்ஹபினர் ''சுப்ஹான ரப்பியல் அளீம் வபிஹம்திஹி'' (மேலான இறைவனுக்கே எல்லாப் புகழும். அவனே புகழுக்குரியவன் என்றும்,

ஹனஃபி மத்ஹபினர் ''சுப்ஹான ரப்பியல் அளீம்'' என்றும், ஜமா அத்துடன் சேர்ந்து தொழும் பொழுது மூன்று தடவைகள் கூறவேண்டும்.

தனித்த நிலையில் தொழும் பொழுது இதை அதிகமாக ஓதிக் கொள்ளலாம்.

எனவே ஜமாஅத் தொழுகையின் பொழுது தம்மைப் பின் தொடர்ந்து தொழுபவருக்கு சிரமம் ஏற்படும் என்பதால் இமாம் இதனை மூன்று தடவைக்கும் அதிகமாக ஓதுவது சரியல்ல.

'அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 'ருகூஉ' வில் நடுத்தரமாகவே குனிவர். தங்களின் தலையை அவர்கள் மிகத் தாழ்த்தியதோ அல்லது மிகவும்



உயர்த்தியதோ இல்லை. தலையைத் தாங்களின் முதுகுக்குச் சமமாக வைத்திருப்பர் என்று நஸயீயில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''ஒருவர் ருகூஉவிலும் சுஜூதிலும் தம் முதுகைச் சரியாக அல்லது நேராக வைக்காத வரை அவர்களின் தொழுகை சரியாகாது. அத்தகையோர் தங்களின் தொழுகையைத் திருடுகின்றனர்.'' என்று கூறினர்.

'ருகூஉ'வில் நிற்கும் பொழுது அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தங்களின் இருகைகளையும் தங்களின் விலாப்பக்கத்தை விட்டும் தூரமாக வைத்துக் கொள்வர். பின்னர்—'ஸமியல்லாஹுலிமன் ஹமிதஹ்' என்று கூறியவர்களாக நிமிர்ந்து நிற்பர்.

ஒரு தடவை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறிய பொழுது ஒருவர், ''ரப்பனா லகல் ஹம்து கதீரன் தைபின் முபாரகன் ஃபீஹி'' என்று கூறியதை அவர்கள் செவியுற்றனர்.

தொழுது முடித்ததும் யார் அவர் என்று விசாரித்து ''முப்பதுக்கும் அதிகமான வானவர்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டு அதன் பலனை அவருக்கு எழுதுவதைக் கண்டேன்'' நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

### அல்லாஹ் கூறுகின்றான்

மேலும் அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா தன் திருமறையில்,

''மர்யமே, உன்னுடைய இரட்சகனுக்கு நீ (முற்றிலும்) வழிபட்டு (சிரசை பூமியில் வைத்து) நீ ஸுஜூது செய்து (சாஷ்டாங்கம் செய்து) 'ருகூஉ' செய்பவர்களுடன் நீயும்

(குனிந்து) 'ருகூஉ' செய்'' என்றும் அவ்வானவர்கள் கூறினர்.'' (3:43)
என்று கூறுகின்றான்.

இத்திருவசனத்தில் அல்லாஹ் ருகூஉ, ஸுஜூது ஆகிய இரு செயல்களையும் குறிப்பிடுகின்றான். இத்தகைய வழிபாட்டின் மூலமே இறைவனின் நெருக்கத்தையும், இறையன்பையும் பெற முடியும்.

இதனாலேயே அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், ''தொழுகையில் ருகூஉவையும், ஸுஜூதையும் நீளமாகவும், நிம்மதியாகவும் செய்யுங்கள்'' என்று கூறினார்கள்.

தொழுகையில் இவ்விரண்டும் மிக்க சிறப்பிற்குரியனவாகும்.

எத்தொழுகையில் இவை இரண்டும் இல்லையோ அது வணக்கம் என்று கூறுவதற்கில்லை.

இத்திருவசனத்தில் இடம் பெற்றுள்ள ''ருகூஉ செய்பவர்களுடன் நீயும்சேர்ந்து ருகூஉ செய்!'' என்னும் இறை ஆணையை வானவர்கள் அன்னை மர்யம் (அலை) அவர்களிடம் கூறிய பின்னர், அவர்கள் ''தம் இரு பாதங்களும் வீங்கி சுரக்கும் அளவிற்குத் தொழுது கொண்டிருந்தார்கள்'' என்று ஹஜ்ரத் அபூஸயீது (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(அறிவிப்பு: இப்னு ஜுரைர்)

## ஸுஜூது

தொழுகையில் 'ருகூஉ'க்கு அடுத்தபடியாக இடம்பெறும் மிக்கத் தலையாய அங்கமாகும் இது. 'ஸுஜூது என்பது சஜ்தா என்ற சொல்லின் பன்மையாகும். சஜ்தா என்றால் 'தலையைத் தரையில் வைத்துப் பணிதல்' என்பது பொருளாகும்.



ஆதம் (அலை) அவர்களுக்கு வானவர்கள் இறையாணைப்படி ஸுஜூது செய்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இறையாணைக்குக் கீழ்படிந்துதான் வழிபடும் முறையில் மரியாதைக்காக அவர்கள் ஸுஜூது செய்தார்களேயன்றி வணங்கும் முறையில் அல்ல என்று இதற்குப் பொருள் கொள்ள வேண்டும்.

அவ்வாறு ஸுஜூது செய்ய அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா ஆணையிட்டதன் பின்னரே தங்களைக் காட்டிலும் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) மேலானவர் என்று வானவர்கள் உணர்ந்தனர். இப்லீஸ் மட்டும் அவ்விதம் செய்ய மறுத்து இறைமுனிவுக்கு ஆளானான்.

அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மிஃராஜின் பொழுது (விண்ணேற்றத்தின் பொழுது) கியாம், ருகூஉ ஆகிய நிலைகளிலிருந்த வானவர்கள் அந்நிலைகளிலேயே நபி (ஸல்) அவர்களை வரவேற்றார்கள் என்றும், ஆனால் ஸுஜூதிலிருந்த வானவர்கள் அந்நிலையிலிருந்து எழுந்து அமர்ந்து ஸலாம் கூறி வாழ்த்தி விட்டு பின்னர் மீண்டும் ஸுஜூதிற்குச் சென்று விட்டனர் என்றும், அதனாலேயே தொழுகையில் இரு ஸுஜூதுகள் ஏற்பட்டதென்றும் கூறப்படுகின்றது.

அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுக்கு அறிவுரை பகரும் முகமாக தன் திருமறையில்,

''நீர் உம் இறைவனைத் துதி செய்து புகழ்ந்து சிரம் பணிவோரில் நீரும் ஒருவராகி விடும்!'' (15:98)
என்று கூறுகின்றான்.

ஸுஜூதில்தான் அடியான் இறையண்மையை மிகவும் நெருங்கி இருப்பதால் இந்நிலையில் இறைஞ்சுவதை அதிகப் படுத்துமாறு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

''ஃபஸப்பிஹ் பிஸ்மி ரப்பிகல் அளீம்'' என்ற திருவசனம் இறங்கியபொழுது ''இதனை உங்களின் ருகூஉவில் ஆக்குக!'' என்று அண்ணல் நபி (ஸல்) கூறினர்.

பின்னர் ''ஸப்பி ஹிஸ்ம ரப்பிகல் அஃலா'' என்ற திருவசனம் இறங்கியபொழுது அதனை ஸஜ்தாவில் ஆக்கிக் கொள்ளுமாறும் கூறினர்.

எனவே தான் ஸுஜூதில் ''சுப்ஹான ரப்பியல் அஃலா வ பிஹம்திஹி'' (மாண்புமிகு என் இறைவனைத் தூய்மையானன் என்று துதிக்கிறேன்) என்று மூன்று முதல் பதினொரு தடவை வரை ஒற்றைப் படையாக கூறவேண்டும்.

மேலும் ஸுஜூது செய்யும் பொழுது இரண்டு கால்களின் விரல்களும், இரண்டு முழங்கால்களும், இரு உள்ளங்கைகளுடன் விரல்களும், மூக்கும், நெற்றியும் பூமியில் பட வேண்டியது அவசியம்.

## இமாமை முந்துதல்

இமாமைப் பின்பற்றித் தொழும்பொழுது இமாமுடன் சேர்ந்து சஜ்தாவுக்குச் செல்லவேண்டும்; அது போன்றே சஜ்தாவிலிருந்து தலையைத் தூக்க வேண்டும். அவரை முந்தக் கூடாது.

அதாவது இமாம் சஜ்தாவுக்குச் செல்லுமுன் அவரைப் பின்பற்றித் தொழுபவர் சென்று விடக்கூடாது. அதேபோன்று இமாம் தலையைத் தூக்குமுன் பின்பற்றித் தொழுபவர் தூக்கி விடக்கூடாது.

ஒரு முறை ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் கஃபாவில் இமாமைப் பின்தொடர்ந்து தொழுதார். அப்பொழுது அவர் சஜ்



தாவில் ஒவ்வொரு தடவையும் இமாமை முந்திக்கொண்டிருந்தார்.

அதைக்கண்ட ஹஜ்ரத் ஸயீது இப்னு முஸையிப் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் தொழுகை முடிந்ததும் தம் செருப்பை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு,

''இவ்வாறா தொழுவது? உம்மை இதனால் அடிக்க விரும்புகிறேன்'' என்று கூறினார்கள்.

அதற்கு ஹஜ்ஜாஜ் யாதொன்றும் மறுமொழி கூறவில்லை.

பின்னர் ஹஜ்ஜாஜ் மதீனாவின் ஆளுநராக வந்தபொழுது அவர் ஹஜ்ரத் ஸயீது இப்னு முஸையப் (ரலி) அவர்களைச் சந்தித்து,

''தாங்கள் அன்று என்னை அவ்வாறு எச்சரித்ததற்காக இறைவன் தங்களுக்கு நற்கூலி வழங்குவானாக! அன்றிலிருந்து இன்று வரை நான் அச்சொல்லை நினைவு கூராமல் தொழுவதில்லை'' என்று கூறினார்.

## இருபத்தைந்து மடங்கு நன்மை

வீட்டில் தனித்துத் தொழுவதைக் காட்டிலும், பள்ளிக்குச் சென்று தொழுவதே சிறப்பாகும். நன்மை அதிகமாகும்.

ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது;

''ஜமாஅத்துடன் தொழும் ஒருவருக்கு அவர் தம் இல்லத்திலோ அல்லது தம் கடையிலோ தொழுவதைக் காட்டிலும் (நன்மை) இருபத்தைந்து மடங்கு அதிகமாக்கப்படும். அதற்குக் காரணம் என்னவெனில், அவர் உளூ செய்யும் பொழுது அழகிய முறையில் உளூச்செய்து பள்ளிக்குப் புறப்படுகின்றார். அவர் புறப்படுவது தொழுவதற்காகவேயன்றி வேறில்லை. எனவே அவர் ஓர் அடி எடுத்து வைத்தால் அதன் காரணமாக அவருக்கு ஒரு பதவி உயர்த்தப் படுகிறது.

அன்றி, அவருடைய ஒரு பாவம் அழிக்கப்படுகிறது. மேலும் வானவர்கள், தொழும் இடத்தில் அவர் இருக்கும் வரை ''யா அல்லாஹ்! அவர் மீது நீ அருள் புரிவாயாக! யா அல்லாஹ்! அவருக்கு நீ கிருபை செய்வாயாக!' என்று அவருக்காக இறைஞ்சத் தவறுவதில்லை. மேலும் உங்களில் எவரும் தொழுகையை எதிர்பார்த்திருக்கும் காலம் வரை தொழுகையிலிருப்பவர் ஆவார்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல்: புகாரீ, முஸ்லிம், முஅத்தா, அபூதாவூத், திர்மிதீ

(மேற்கண்ட ஹதீஸ் புகாரீயில் இடம் பெற்றதாகும்.)

வேறொரு அறிவிப்பில் ஜமாஅத்துடன் தொழும் தொழுகைக்கு இருபத்தேழு மடங்கு கிடைக்கும் என்பதாக கூறப்பட்டுள்ளது.

ஹஜ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:-

அண்ணல் நபி (ஸல்!) அவர்கள் 'ஜமாஅத்துடன் தொழுவது தனியாகத் தொழுவதைக் காட்டிலும் இருபத்தேழு மடங்கு தகுதியால் சிறப்புற்றதாகும்'' என்று கூறினார்கள்.

நூல்; புகாரீ, முஸ்லிம்.

இத்தகு நன்மைகள் நிறைந்த ஜமாஅத் தொழுகையை கைவிடுதல், அலட்சியமாக விட்டு விடுதல், எப்பொழுதுமே தனித்துத் தொழுதல் ஆகியவை இறைவனின் வெறுப்பிற்குரிய செயல்களாகும்.

## தொலை தூரத்திலிருந்து ஜமாஅத்திற்கு வருதல்

தனித்துத் தொழுவதைக் காட்டிலும் ஜமாஅத்துடன் தொழுவது மிகுந்த நன்மையை கொள்ளையடிக்கும் செயல் என்று கண்டோம். அதனைக் காட்டிலும் மிகுந்த நன்மை



யைப் பெறுபவர் எவர் தெரியுமா?பள்ளி வாயிலிலிருந்து வெகு தொலைவில் வீடு இருந்தும் தவறாமல் ஐவேளையும் வந்து ஜமாஅத் தொழுகையில் கலந்து கொள்பவரே ஆவார்.

ஹஜ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் பின்வரும் ஹதீஸை அறிவிக்கின்றார்கள்:-

''(தொழுபவர்) அனைவரிலும் அதிக நன்மையை அடைபவர் அவர்களில் தொலைவிலிருந்து நடந்து வருபவராவார். பின்னர் (அதிகப் பலனை அடைபவர்) அவரைக் காட்டிலும் இன்னும் தொலைவிலிருந்து வருபவராவார். மேலும், தொழுது விட்டுத் தூங்கி விடுபவரைக்காட்டிலும், இமாமுடன் சேர்ந்து தொழும் வரை காத்திருப்பவர் அதிகப்பலனை அடைபவராவர்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

**நூல்: ரஜீன்**

எனவே, தொலைதூரத்திலிருந்து வந்து ஜமாஅத்தில் கலந்து கொள்வது மட்டுமல்ல; இமாம் ஜமாஅத்துடன் பள்ளியில் காத்திருப்பதும் அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் நற்செயல்களாகும் என்பதை நாம் நம்முடைய மரணம் வரும் வரை மறந்து விடக்கூடாது.

ஹஜ்ரத் உபை இப்னு கஃபு (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:-

''ஒரு மனிதர் இருந்தார். அவரைக் காட்டிலும் பள்ளிக்கு அதிக தொலைவில் வீட்டைப் பெற்றிருந்தவர் எவரையும் நான் அறியேன். அதே வேளையில் அவர் எந்தத் தொழுகையையும் தவறியதே கிடையாது. எனவே அவரிடம் ''நீர் ஒரு கழுதையை வாங்கி அதன் மீதமர்ந்து இருளின் பொழுதும், வெய்யிலின் பொழுது வரலாமே!'' என்று கூறப்பட்டதற்கு அவர், ''நிச்சயமாக, என் வீடு பள்ளிக்கு அருகில் இருப்பது எனக்கு விருப்பம் தரக்கூடியது அல்ல. எனினும், நான் விரும்புவதெல்லாம் பள்ளிக்கு வரும் பொழுதும், பின்னர் திரும்பி என் இல்லத்திற்குச் செல்லும் பொழுதும் நான்

எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் (அவ்வளவு நன்மைகளாக) எழுதப்படுவதற்கே ஆகும்,' என்று கூறினார். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், 'நிச்சயமாக அல்லாஹ் இவை அனைத்தையும் உமக்காகச் சேகரித்து (அடிக்கு அடி நன்மை என எழுதி) வைத்துள்ளான்' என்று கூறினர்''

நூல்: முஸ்லிம், அபூதாவூத்.

ஆக, ஸஹாபாப் பெருமக்கள், தங்கள் இல்லங்கள் பள்ளியிலிருந்து வெகு தொலைவிருந்த போதும், இல்லங்களில் தனித்துத் தொழ விரும்பாமல் பள்ளிக்கு வந்து ஐவேளைத் தொழுகைகளை நிறைவேற்றுவதிலேயே ஆர்வம் உடையவர்களாய் இருந்தார்கள். காரணம், அதன் நன்மைகளை அவர்கள் உணர்ந்திருந்ததே ஆகும்.

## ஜமாஅத்தை விடுவதற்கு அனுமதி உண்டா?

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:-

''எவர் பாங்குகூறப்பட்டதை செவியுற்ற பின்னர் (பாங்கு கூறிய) அவரைப் பின்பற்றி (பள்ளிக்கு வர) ஏதேனும் ஒரு குறை அவருக்குத் தடையாக இல்லாதிருந்தும் (தம் இல்லத்தில்) தொழும் தொழுகை அவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர். 'குறை என்றால் என்ன?' என்று அவர்களிடம் வினவப்பட்டதற்கு, 'அச்சம் அல்லது நோய்' என்று அவர் பதில் அளித்தனர்.

நூல்: அபூதாவூத்.

ஆக, ஜமாஅத் தொழுகையை விடுவதற்கு மார்க்கத்தில் அனுமதி உண்டு. ஆனால் அதற்கு, மேற்கண்ட ஹதீஸில் கூறப்பட்டுள்ள அச்சம் அல்லது நோய் போன்ற தக்க காரணங்களின்றி ஜமா அத்தைப் புறக்கணிப்பது பெரும் பாவமாகும்.



## ஜமாஅத் தொழுகையைவிடுவதற்கு மார்க்கம் வரையறுத்த எல்லைகள்:

1. குளிர்காலம்; பனி கொட்டுகிறது; அப்பொழுது புறப்பட்டு பள்ளிக்குச் சென்றால் உடல் நலம் கெட்டுவிடும் அல்லது நோய் அதிகரிக்கும் என்ற அச்சம் எவருக்கேனும் இருப்பின் அவர் ஜமாஅத்தை விடலாம்.

(துர்ருல் முக்தார்)

2. இரவின் இருள் அதிகமாயிருப்பினும் பள்ளிக்குச் செல்வதற்கான வழி தென்படாதிருப்பினும் ஜமாஅத்தை விடலாம்.

(துர்ருல் முக்தார்)

இக்காலத்தில் மின் விளக்குகள் இரவைப் பகலாக (ஒளி வெள்ளமாக) மாற்றியுள்ளதால் பள்ளிக்குச் செல்ல வழி தெரியவில்லை, எங்கும் இருள் சூழ்ந்துள்ளது என்றெல்லாம் காரணம் சொல்ல முடியாது; மேலும் டார்ச் போன்ற பேட்டரியால் இயங்கும் விளக்குகள் இருப்பதால் அவற்றைப் பயன்படுத்தி ஜமாஅத் தொழுகைக்காக பள்ளிக்குச்சென்று தொழத்தான் வேண்டும். விடக்கூடாது.

3. நோயுற்றுள்ள ஒருவரால் நடக்க இயலவில்லை; அவர் ஜமாஅத்தைவிடலாம். மேலும் குருடர், கால் துண்டிக்கப்பட்டவர் ஆகியோர் ஜமாஅத் தொழுகையை விட அனுமதி உண்டு, ஆனால் குருடர் ஒருவரால் பள்ளிக்குச் சென்று வர இயலுமாயின் அவர் ஜமாஅத் தொழுகையை தொழுதல் வேண்டும். இங்கு ஓர் ஹதீஸ் ஆதாரத்தைப் பார்ப்போம்:-

ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது :

''குருடர் ஒருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''நாயகமே! என்னைப் பள்ளிக்கு அழைத்து வரக் கூடிய எவரும் என்னிடம் இல்லை என்று கூறி, தமக்கு(தம்

இல்லத்திலேயே தொழ) அனுமதி வழங்க வேண்டுமென வேண்டினார். எனவே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கினர். பின்னர் அவர் திரும்பிச்சென்றார். அப்பொழுது அவர்கள் அவரை அழைத்து ''பாங்கு கூறுவது உமக்குக் கேட்கிறதா?'' என்று கேட்டனர். அதற்கவர், 'ஆம்!' என்றார். 'அவ்வாறாயின் (அவரின் அழைப்பை) ஏற்று (வந்து தொழுது)க் கொள்ளும்' என்று கூறினர்.

நூல்: முஸ்லிம். நஸயீ.

இதிலிருந்து, இருகண்கள் தெரியாத குருடராயினும்; பள்ளியில் கூறப்படும் பாங்கோசை செவியிற் படாத தொலைவில் உள்ளவர்களுக்கு மட்டுமே ஜமாஅத் தொழுகையை விட்டு விட அனுமதியுண்டு; அம்மனிதர் பாங்கோசையை செவியுறும் தொலைவிலேயே இல்லம் உடையவராயிருப்பின் அவரும் ஜமாஅத்துடன் சேர்ந்துதான் தொழ வேண்டும். விடக்கூடாது என்று விளங்குகிறது.

4. ஒருவர் பள்ளிவாயிலுக்கு செல்ல விரும்புகிறார், ஆனால் அவர் பள்ளியில் ஜமாஅத் தொழுது விட்டுத் திரும்புவதற்குள் அவருடைய செல்வம் திருடர்களால் கொள்ளையடிக்கப்பட்டு விடும் என்று அச்சம் அவருக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அவர் ஜமாஅத்தை விடுவது கூடும்.

(துர்ருல் முக்தார்)

5. பள்ளி வாயிலுக்குச் செல்லும் வழியில் விரோதிகளால் உயிருக்கு ஆபத்து நேரும் என்ற நிலையிலும், கடன்காரனின் தொல்லை ஏற்படும் என்றாலும் ஜமாஅத்தை விடலாம்.

(துர்ருல் முக்தார்)

ஆனால் கடனைத் திருப்பித் தரக்கூடிய அளவில் அவனிடம் பொருளிருந்தும், அதனை அவன் திருப்பித்தராமலிருந்தால், அவனுக்கு ஜமாஅத்தை விட அனுமதியில்லை.



6. புயலும், சூறாவளியும் கடுமையாக வீசுகின்ற காரணத்தால், மேலும் அது இரவாயிருப்பின் ஜமாஅத் தொழுகையை விடுவது கூடும்.

(துர்ருல் முக்தார்)

7. தொப்புளிலிருந்து முழங்கால் வரை ஓர் ஆடவனுக்கு மறைத்துக்கொள்ள துணியில்லையேல் அவனும் ஜமாஅத்தை விடுவது கூடும்.

(பதாவா ஆலம்கீரி)

8. நோயாளிக்கு உடன் இருந்து ஊழியம் செய்பவர் ஜமாஅத்தை விடுவது கூடும்.

(துர்ருல் முக்தார்)

காரணம், நோயாளியை அவர் அப்படியே விட்டு விட்டு சென்று விடுவாராயின், அவருக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே ஊழியம் செய்யும் மனிதர் ஜமாஅத் தொழுகையை விட்டு விட மார்க்கம் அனுமதி வழங்குகிறது.

9. ஒருவர் பசியாயிருக்கிறார். உணவும் தயாராயுள்ளது. உணவு உண்ணாமல் தொழுதால் மன ஓர்மை ஏற்படாது என்ற அச்சம் இருப்பினும், அல்லது மலமோ, சிறுநீரோ கழிக்க நிர்பந்த நிலை ஏற்படினும் ஜமாஅத்தை விடுவது கூடும்.

(துர்ருல் முக்தார்)

## ஜமாஅத்துடன் தொழாதது ஏன்?

ஒருமுறை ஹஜ்ரத் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களிடம் சிலர் வந்து,

''இன்ன மனிதர் இருபது ஆண்டுகளாக ஜமாஅத் தொழுகையில் கலந்து கொள்வதில்லை; எவரிடமும் சேர்ந்திருப்பதில்லை.'' என்று ஒரு மனிதரைப் பற்றி குறை கூறினர்.

அது கேட்ட ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், அம்மனித ரைக் காணச் சென்றனர். அவரிடம் சென்று அதற்கான காரணத்தை வினவினர்.

அதற்கவர்,'' அன்பு கூர்ந்து என்னை மன்னிக்க வேண் டும். நான் ஓர் அலுவலின் மீது என்னுடைய முழு கவனத் தையும் செலுத்தி வருகிறேன். அதனாலேயே ஜமாஅத் தொழ இயலாதவனாக உள்ளேன்'', என்று விடையளித் தார்.

அது கேட்ட அவர்கள் ''அப்படிபட்ட அலுவல் என்ன?'' என்று கேட்க,

அப்பொழுதவர், ''எனக்கு அல்லாஹ் ஒவ்வொரு கணப் பொழுதும் தன்னுடைய ரஹ்மத் என்னும் பேரருளை சொரிந்த வண்ணம் உள்ளான். ஆனால் நானோ ஒவ்வொரு கணமும் பாவம் செய்துக் கொண்டே உள்ளேன். எனவே நான் என் னுடைய ஒவ்வொரு மூச்சையும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதிலும், நான் செய்யும் பாவங்களுக்கு பாவ மன் னிப்புக் கோருவதிலும் கழித்து வருகிறேன். எனவே எனக்கு அவற்றிற்கெல்லாம் நேரமில்லை'' என்று கூறினார்.

அதற்கவர்கள் அம்மனிதர் மீது மிக்க திருப்தியுற்று,

''நீர்தான் என்னை விடச் சிறந்தவர். நீர் அவ்விதமே செய்து வாரும்'' என்று கூறினர். பின்னர் அங்கிருந்து விடை பெற்றுத் திரும்பினர்.

மேற்கண்ட நிகழ்ச்சியில், அம்மனிதர் ஜமாஅத்துடன் சேர்ந்து கூட்டுத் தொழுகை தொழாதது போன்று நாமும் இருக்கலாம் என்று நாம் தவறாக எண்ணி விடக்கூடாது.

அது ஆன்மீகம்; மெய்ஞ்ஞானம்; அதனைப் புரிந்து கொள்வது ஆன்மீக வாதிகளாலேயே சாத்தியமாகும். அது நம்மால் புரிந்து கொள்வது சற்று கடினமே!



இமாமுல் அஃளம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களின் மாணவர் ஹஜ்ரத் தாவூத்தாயீ (ரஹ்) அவர்கள் கூட தனித்து ஓர் அறையிலிருந்து வெளியே வராமல் இரவும் பகலும் வணக்கம் புரிந்தவர்களே!

ஹஜ்ரத் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் பல்லாண்டு காலம் குகையில் தனித்திருந்து வணக்கம் நிகழ்த் தியவர்களே! அவர்கள் இருந்த இடத்தின் அருகில் பள்ளி வாயிலோ, ஜமாஅத் தொழுகையோ இல்லாமையால் நெடுந் தொலைவு சென்று ஜமாஅத்தில் அவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை.

எனவே, ஒரு மனிதரால் ஜமாஅத்தில் கலந்து கொள்ள முடியவில்லை என்றால் அதற்குத் தகுந்த காரணம் தேவை. பெரியார்களும், ஞானியரும் இறைவணக்கத்தை தங்களின் உயிராகவும், மூச்சாகவும், உணவாகவும் கொண்டிருந்தனர். எனவே அவர்களுள் ஒரு சிலரால் ஜமாஅத்தில் கலந்து கொள்ள இயலவில்லை. ஆனால் அவர்கள் வேண்டுமென்றோ அல்லது அலட்சியமாகவோ, ஜமாஅத்தைத் தவற விட்ட தில்லை. மேலும் உலகக் காரியத்தில் ஈடுபட்டோ ஜமா அத்தை விடவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் பள்ளிவாசலின் அருகில் உள்ளவர்கள் பள்ளி யில் தொழுதாலொழிய அவருக்கு நன்மை இல்லை.

சிலர் அடர்ந்த காடுகளுக்குச் சென்று அங்கு நின்று அல் லாஹ்வை அல்லும் பகலும் வணங்கி வந்தனர். அதனால் அவர்களால் ஜமாஅத்தில் கலந்து கொள்ள முடியாதுதான்.

ஹஜ்ரத் அவ்ரங்கசீப் ஆலம் கீர் (ரஹ்) அவர்கள் தங்கள் வாழ்நாளின் முற்பகுதியில், துறவு நிலையை விரும்பி காட் டில் சென்று வணக்கம் நிகழ்த்தி வந்தனர்.

## அனுமதி இருப்பினும் ஜமாஅத்துடன் தொழுவதே சிறந்தது

1. அடை மழை பெய்துக் கொண்டிருக்கும் பொழுது ஜமாஅத்தை விடலாம்.

(ரத்துல் முக்தார்)

இதுபற்றி இமாம் முஹம்மது (ரஹ்) அவர்கள் முஅத்தாவில் எழுதியுள்ளதாவது, ''மழையின் காரணமாக ஜமாஅத்தை விட்டுவிட மார்க்கத்தில் அனுமதி இருப்பினும், ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுவதே சிறந்தது''

2. பள்ளிவாயிலுக்குச் செல்லும் வழியில் சேறும் சகதியும் உள்ளது. அவ்வழியே நடந்து செல்வது மிகவும் சிரமத்திற்குரியது என்ற நிலை இருப்பின் ஜமாஅத்தை விடுவது கூடும்.

இதுபற்றி ஹஜ்ரத் இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''இதற்காக ஜமாஅத்தை விடுவதை நான் விரும்பவில்லை'' என்று கூறினார்கள்.

ஆக, மழையானாலும், சேறானாலும், சகதியானாலும் காரணங்களைக் கூறிக் கொண்டிராமல் சிரமப்பட்டேனும் பள்ளிக்குச் சென்று ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றுவதே சாலச் சிறந்தது என மேற்கண்ட இரண்டு இமாம்களும் நமக்குக் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

3. ஒருவர் பயணத்திற்குத் தயாராக உள்ளார். ஜமாஅத்துடன் தொழுவதானால் பயணத்திற்குரிய வாகனத்தைத் தவறவிட்டு விட நேரும் என்ற நிலை இருப்பின் அவர் தனியே தொழுது விட்டு பயணத்தை மேற்கொள்வது கூடும். இந்நிலையில் ஜமாஅத்தை விடுவது குற்றமாகாது. எனினும் ஒரு வண்டி தவறினாலும் மறுவண்டி கிடைக்கும் என்ற நிலை இருப்பின் ஜமாஅத்துடன் தொழுவது நல்லது. ஆனால் தவிர்க்க இயலாத காரணத்தால், உடனே புறப்பட்டாக வேண்டும் என்ற நிலை இருப்பின் ஜமாஅத்தை விடுவது கூடும்.

(குன்யஹ்)



## அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஜமாஅத் தொழுகையில் காட்டிய ஆர்வம்;

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்களின் வாழ்நாளில் எப்பொழுதும் ஜமாஅத்துடனே பர்லுத் தொழுகைகளைத் தொழுது வந்தனர். கடமையான தொழுகைகளைத் தனித்துத் தொழ அவர்கள் ஒருபோதும் விரும்பியதில்லை. ஜமாஅத்தொழுகையில் அவர்கள் காட்டிய ஆர்வமோ அளவிட முடியாததாகும்.

நோயுற்றிருந்த பொழுது கூடஅவர் ஜமாஅத்தை விட்டதில்லை.

ஹஜ்ரத் அஸ்வத் (ரலி) அவர்கள் கூறுவதாவது:

''ஒரு நாள் நாங்கள் ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சமூகத்தில் குழுமியிருந்தோம். அப்பொழுது தொழுகையைத் தொடர்ச்சியாகத் தொழுவது, தொழுகையின் பலன்கள், அவசியம் ஆகியவை பற்றியபேச்சு பேசப்பட்டது. அவற்றை அவர்கள் ஆதரித்து, அண்ணல் நபி (ஸல்)அவர்கள் நோயுற்ற பொழுது நடந்த ஒரு சம்பவத்தை விவரித்தார்கள்.

'ஒருநாள் தொழுகை நேரம் வந்து பாங்கு சொல்லப்பட்டது. அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், 'அபூபக்கரைத் தொழ வைக்குமாறு கூறுங்கள்' என்று கூறினார்கள். 'அபூபக்கர் இளகிய மனம் உள்ளவராக இருக்கின்றார். தங்களுடைய இடத்தில் அவர் நிற்பாராயின் இயலாதவராகி விடுவார்' என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. (அதற்கு) அண்ணல் நபி (ஸல்) அவர்கள், 'ஆயிஷாவே! உம்முடைய பேச்சு யூசுஃப் (அல்) அவர்களிடம் எகிப்து நாட்டு பெண்கள் பேசிய பேச்சைப் போன்றல்லவா இருக்கிறது!' என்று கூறி,

'அபூபக்கரைத் தொழ வைக்கச் சொல்லவும்' என்று கூறினார்கள்.

அதன் பின்னர், அண்ணலாரின் ஆணைக்கிணங்க ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தொழ வைக்கப்போனார்கள். அதற்குள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உடல் நிலை சற்று நலமாகக் காணப்பட்டது. எனவே அவர்கள் இருவரின் ஆதரவில் புறப்பட்டார்கள். அது இன்று என் கண்ணெதிரே தெரிகிறது.

நபி (ஸல்) அவர்களின் பாதங்கள் பூமி மீது நிற்க இயலாமற் தவித்துக் கொண்டிருந்தன. நடக்கும் போது கூட அடிமேல் அடி வைக்க முடியாமல் கஷ்டப்பட்டனர். ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஜமாஅத் தொழுகை நடத்திக் கொண்டிருந்தார்கள். அண்ணலாரின் வருகையைக் கண்டதும் பின்னால் விலகிக் கொள்ள முயன்றார்கள். எனினும் நபி (ஸல்) அவர்கள் தடுத்து விட்டார்கள். இறுதியில் அபூபக்கர் (ரலி) அவர்களே தொழவைத்தார்கள்.

## ஜமாஅத் தொழுகையின் சிறப்பு

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''கூட்டாக (ஜமாஅத்துடன்) சுப்ஹுத் தொழுதவன் ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களுடன் இருபது ஹஜ்ஜுகளை நிறைவேற்றியவன் போலாவான். ஜமாஅத்துடன் லுஹரை நிறைவேற்றியவன் இப்றாஹீம் நபி (அலை) அவர்களுடன் நாற்பது ஹஜ்ஜுகளை நிறைவேற்றியவன் போன்றவன் ஆவான். ஜமாஅத்துடன் அஸர் தொழுகையைத் தொழுதவன் நபி மூஸா (அலை) அவர்களுடன் அறுபது ஹஜ்ஜுகளை நிறைவேற்றியவன் போலாவான். மக்ரிபுத் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றியவன் நபி ஈஸா (அலை) அவர்களுடன் எண்பது ஹஜ்ஜுகளை நிறைவேற்றியவன் போன்றவன் ஆவான். இஷாத் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுதவன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நூறு ஹஜ்ஜுக்களை நிறைவேற்றியவன் போலாவான்.



ஜமாஅத்துடன் கடமையான (பர்ள்) தொழுகைகளை நிறைவேற்றுவதால் கிடைக்கும் நன்மைகளையும் சிறப்புகளையும் பார்த்தீர்களா?

மேலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

''எவன் ஒருவன் ஜமாஅத்துடன் நாற்பது நாட்கள் தொழுகின்றானோ அல்லாஹு தஆலா அவனை மூதேவித்தனத்தை விட்டும், நரகத்தை விட்டும் உரிமைச் சீட்டு எழுதுகின்றான்.''

எனவே தொழுகையாளியாகி விட்ட ஒவ்வொருவரும், ஜமாஅத்துடன் தொழுவதையேதம் வாழ்வில்கட்டாயக் கடமையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் அது நபி வழியாகும். மேலும் ஜமாஅத்துடன் (கூட்டாகத்) தொழுவதால் ஷைத்தான் விரண்டோடுகிறான்.

''அல்லாஹு தஆலா மூன்று பேர்களைப் பார்த்து மகிழ்ச்சியுறுகிறான்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

முதலாவது மனிதர் ஜமாஅத்துடன் தொழுவதற்காக ஸஃப்பில் நிற்பவர்.

இரண்டாம் மனிதர் நள்ளிரவில் எழுந்து தஹஜ்ஜுத் தொழுபவர்.

மூன்றாம் மனிதர் இஸ்லாமியப் படையில் சேர்ந்து போர் புரிபவர்.

சகோதரர்களே! நன்றாக சிந்திக்க வேண்டும். அல்லாஹ்வின் மகிழ்ச்சிதானே நம்மகிழ்ச்சி! அண்ணல் நபி (ஸல்), அவர்களின் விருப்பம் தானே நம் விருப்பம்.

ஜமாஅத்துடன் நாம் தொழுவது அல்லாஹ்வுக்கு இத்துணை உவப்பானது என்றிருக்கும் பொழுது, அதனைப் பேணித் தொழாது இருப்பது எத்துணைப் பெரிய நஷ்டம் நமக்கு!

மேலும் ஜமாஅத் தொழுகைக்கு எத்துணைப் சிறப்புகள் உள்ளன என்று பாருங்கள்!

ஹஜ்ரத் உஸ்மான்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்;-

''எவர் இஷாத் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுதாரோ அவர் பாதி இரவு நின்று தொழுதவர் போலாவார். எவர் ஸுப்ஹுத் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுதாரோ அவர் இரவு முழுவதும் நின்று தொழுதவர் போலாவார்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன்.

நூல்: முஸ்லிம், அபூதாவூத், முஅத்தா, திர்மிதி

மேலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**''அல்ஜமாஅத்து கைரும் மினத்துன்யா வமா பீஹா''**

''ஜமாஅத் என்னும் கூட்டுத் தொழுகையானது இவ்வுலகத்திலுள்ள அனைத்தைக் காட்டினும் சிறந்ததாகும்.

மனிதன் இவ்வுலகில் மென்மேலும் பொருள் சேர்க்கவே விரும்புகின்றான். அவனின் ஆசை நாளுக்கு நாள் பல்கிப் பெருகி பேராசையாக உருவெடுக்கிறது. அடுத்த வீட்டுக்காரனைக் காட்டிலும் தான் செல்வத்தில் மிஞ்ச வேண்டும் என்று அவன் பேயாய் அலைகிறான். பின்னர் அவனுடைய ஆசை எல்லை மீறுகிறது. அப்பொழுது அவனது எண்ணம் என்ன தெரியுமா? 'இந்த ஊரிலேயே நம்மை விடப் பணக்காரன் வேறெவனும் இருக்கக் கூடாது' என்பதே ஆகும்.



அவன் தொழுகையாளியாய் இருந்தும் பேராசை அவனை விட்டு நீங்குவதில்லை. இம்மையே மேலென்பது போல அவன் எண்ணிக் கொள்கிறான். எனவே வாணிபத்தில் பன்மடங்கு லாபம் காண பெரு முயற்சி செய்கிறான். அதனால் பாங்கின் அழைப்பைக்கூட அவனின் செவி ஏற்க மறுக்கிறது. ஜமாஅத்தை விட்டு விட்டு தாமதமாகப் பள்ளிக்கு வந்து தொழுகிறான். பெரும்பாலும் தன்னுடைய இடத்திலேயே தொழுகிறான். இதனால் மறுமையின் மேலான செல்வத்தை இழக்கிறான். ஜமாஅத் தொழுகை இவ்வுலகத்தையும், அதில் உள்ள அனைத்தைக் காட்டிலும் மேலானது என்ற நபி மொழியை அவன் ஏற்க மறுப்பதாலேயே அவனுக்கு இந்த இழி நிலை ஏற்படுகிறது.

## ஜமாஅத்தைப் புறக்கணிப்பவன் நயவஞ்சகனே!

''ஜமாஅத் தொழுகையை விட்டவன் முனாபிக் ஆவான்.'' என்பதாக ஒரு ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அறிவிப்பவர் ஹஜ்ரத் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்களாவர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ''இரு தொழுகைகள் நயவஞ்சகர்கள் (முனாபிக்கள்) மீது பாரமாயிருக்கும். அவை—1. இஷாத் தொழுகை 2. ஸுப்ஹுத் தொழுகையாகும். ஒருவேளை அவ்விரண்டில் உள்ள (நன்மை பலன் ஆகிய)வற்றை அவர்கள் அறிவார்களானால் நிச்சயமாக அவ்விரண்டிற்கும் முழங்காலையேனும் இழுத்துக் கொண்டு தவழ்ந்தாவது வந்திருப்பர். அன்றி தொழுகைக்கு இகாமத் கூறக்கட்டளையிட்டுப் பின்னர், ஒருவரை மக்களுக்குத் தொழ வைக்க ஏற்பாடு செய்த பின்னர் நான் சிலரை விறகுக் கட்டைகளை எடுத்துக் கொள்ளுமாறு செய்து அவர்களுடன் நானும் மக்களிடம் சென்று தொழு

கைக்கு வராதிருப்பவர்களை அவர்களின் வீட்டோடு எரித்து விட உண்மையாகவே நான் உறுதி பூண்டுள்ளேன்''.

அறிவிப்பவர்: ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி)

நூல்: புகாரீ. முஸ்லிம், முஅத்தா, அபூதாவூத், திர்மிதி நஸயீ.

ஜமாஅத்துடன் கலந்து கொண்டு கூட்டாகத் தொழாதவர்கள் மிகக் கெட்டவர்களாவர். அவர்கள் மார்க்கத்தையே அலட்சியப்படுத்தும் முனாபிக் (நயவஞ்சகர்) களாவர். அவர்களின் பெயர்கள் அப்துல்லா, அப்துல் காதிர், முஸ்தபா என்றெல்லாம் இருக்கும். ஆனால் அவர்களின் பழக்கவழக்கங்கள், செயல்கள் எதுவும்-முஸ்லிம்களை ஒத்திராது. ஈமான் என்பது அவர்களிடம் அணுவளவும் காணப்படாது. காஃபிர்களைப் போன்றே கண்ட இடங்களில் நின்று சிறுநீர் கழித்து விட்டு நாயைப் போல் உதறி விட்டு, டேலா பிடிக்காமலும் கழுவாமலும் செல்வார்கள். அவர்களின் தோழமை, நட்பு அனைத்தும் காஃபிர்களுடனேயே இருக்கும் அவனுடனே சுடுகாட்டுக்குச் செல்பவன்போல் வாழ்வான்.

ஜமாஅத்தைப் புறக்கணிப்பவர்கள் ஈமான் குறைந்தவர்களே. ஈமான் (இறை நம்பிக்கை) அற்றவர்கள் என்று கூறினாலும் தவறாகாது. அவர்கள் மறுமையை நம்பமாட்டார்கள். கப்ரு வேதனை, கேள்விக்கணக்கு, சொர்க்கம், நரகம் ஆகியவற்றைக் கிண்டல் செய்கிறார்கள். இவர்களில் பலர் ஜமாஅத்தின் தொடர்பின்மையால் நாளடைவில் கெட்டுக் குட்டிச் சுவராகி விடுகின்றனர்.

விடிந்ததிலிருந்து, உறங்கும் வரை முஸ்லிம் அல்லாதவர்களுடனும் (ஷரீஅத் அற்றவர்களுடனும்) இவர்கள் பழகுவதால் குடி, விபச்சாரம், வட்டி, அநியாயம் அக்கிரமம் ஆகியவை இவர்களிடம் உருவாகி விடுகின்றன.

திமிரான பேச்சும், பெருமித நடையும் இவர்களின் பாணிகளாகும். மார்க்க அறிவில் பூஜ்யம் ஆன இவர்கள், மார்க்க அறிஞர்களையும், தொழுகையாளிகளையும், தாடிவைத்தவர்களையும் தொப்பி போட்டவர்களையும் கேலி செய்வார்கள்; அவர்கள் மீது வசைமாரிப் பொழிவார்கள்; அவர்களைப் பற்றிக் குறைகூறித் திரிவார்கள்; தொழுகையை ஜமாஅத்தை இவர்கள் புறக்கணித்து அலட்சியப் படுத்தியதால் அல்லாஹு தஆலா இவர்களை இத்தகு இழிவான நிலைக்கு ஆளாக்கி விடுகிறான். ஆனால் இவர்களோ தங்கள் நிலைதான் தான் மேலானது என்று எண்ணிக் கொள்வார். எனினும் செத்தவுடன் புரிந்து கொள்வார்கள். கப்ரிலேயே இவர்களுக்கு வேதனைத் துவங்கிவிடும். திமிர் கொண்டு பெருமை அடித்த இவர்களுக்கு அங்கு நிச்சயம் சரியான பரிசு கிடைக்கும்.



அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய ஓர் ஹதீஸை மேலே படித்தோம். ஜமாஅத் தொழுகைக்கு எவர் வரவில்லையோ அவர்களை அவர்களின் வீட்டோடு சேர்த்து எரித்து விட அவர்கள் முடிவு செய்தனர் எனில், ஜமாஅத்தைப் புறக்கணிப்பது எத்துணைத் தீயச்செயல் என்று புரிகின்றதல்லவா?

ஆக, ஜமாஅத்தைப் புறக்கணிப்பது அண்ணல் நபி(ஸல்) அவர்களின் கோபத்திற்கு ஆளாக்கக் கூடிய செயல் என்பது தெள்ளத்தெளிவு. எதனை நபி (ஸல்) அவர்கள் வெறுக்கின்றார்களோ அதனை அல்லாஹ் (ஜல்லஷானஹு வ தஆலா) வும் வெறுக்கின்றான் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. எனவே அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாக விரும்பாதவர்கள் இனியேனும் இறையில்லத்திற்குச் செல்லட்டும்; ஐவேளையும் ஜமாஅத்துடன் (கூட்டாகத்) தொழுது இறையருளைப் பெற்றுக் கொள்ளட்டும்!

ஹஜ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:-

''ஜமாஅத்தோடு தொழாமற் பின் வாங்குவோர் (எவரெனில்) எவருடைய நயவஞ்சகம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தனவோ அத்தகு நயவஞ்சகர் தாம் என்பது நாங்கள்

கண்டறிந்த உண்மையாகும். அல்லது அவர் நோயாளி யாவார். (எனினும்) இந்நோயாளியும் இருவருக்கிடையில் (தோளில் கைப் போட்டுக் கொண்டு) பள்ளி வரை நடந்து வந்து தொழுது வந்தனர்.''

நூல்: முஸ்லிம், அபூதாவூத்

மற்றொரு அறிவிப்பில், ''நிச்சயமாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நமக்கு நேர்வழியின் வழிமுறைகளைக் கற்றுத் தந்தனர். மேலும் பாங்கு சொல்லப்படும் பள்ளியில் தொழுவதும் அந்நேர்வழியின் வழிமுறைகளில் உள்ளது தான் என்று கூறப்பட்டுள்ளது.

இன்னுமோர் அறிவிப்பில், ''உங்களில் ஒவ்வொருக்கும் அவரவர் இல்லத்தில் அவருக்குப் பள்ளியுண்டு. ஆனால் நீங்கள் உங்கள் உங்களுடைய இல்லங்களில் தொழுதுக் கொண்டு பள்ளிகளை விட்டு விடுவீர்களாயின் உங்கள் நபியின் சுன்னத்தைக் கை விடுவீர்களாயின் நீங்கள் பெரும் பாவியாகி விடுவீர்கள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நூல்: அபூதாவூது

எனவே,

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்துகளில் மிகச் சிறந்ததான ஜமாஅத் (கூட்டுத்) தொழுகையை விடுவது மிகவும் ஆபத்தானது.

மேலும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''பகலெல்லாம் நோன்பு நோற்றும், இரவெல்லாம் நின்று தொழுதும் (எனினும்) ஜமாஅத்தோடு தொழவராமலும் இருப்பவர் பற்றி (என்னிடம்) வினவப்பட்டதற்கு நான், 'அவர் நரக வாசிகளில் உள்ளவர் ஆவார்' என்று கூறினேன்.

அறிவிப்பாளர்;- ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி)

நூல்: திர்மிதி.



## அண்ணலாரின் கண்டிப்பு

ஜமாஅத் தொழுகையைப் புறக்கணிப்பவர்களைக் கண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு சினம் கொண்டார்களோ அதனை விவரிக்க வார்த்தைகளே இல்லை எனலாம்.

ஹஜ்ரத் மிஹ்ஜன் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

''ஒருமுறை நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அப்பொழுது பாங்கு சொல்லப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் தொழத் துவங்கினார்கள். நான் என் இடத்திலேயே அமர்ந்திருந்தேன். நபி (ஸல்) அவர்கள் தொழுது முடித்தவுடன் என்னை நோக்கி, ''மிஹ்ஜன்! ஜமாஅத்துடன் ஏன் தொழவில்லை? நீர் முஸ்லிம் தானே!'' என்று கேட்டார்கள்.

அதற்கு நான், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் முஸ்லிம் தான். ஆனால் நான் வீட்டிலேயே தொழுது விட்டேன்'' என்றேன்.

அதற்கு அவர்கள், ''பள்ளிவாசலுக்குள் வரும்பொழுது ஜமாஅத் நடந்து கொண்டிருந்தால் நீரும் அவர்களுடன் சேர்ந்து தொழுதுக் கொள்ளும்! நீர் முன்பே தொழுது விட்டிருந்தாலும் கூட!'' என்று கூறினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தங்களுக்கு மிக்க நெருங்கியத் தோழரான ஹஜ்ரத் மிஹ்ஜன் (ரலி) அவர்களையே ஜமாஅத்தை புறக்கணித்ததற்காகக் கடுமையாகக் கண்டித்தார்கள் எனில் ஜமாஅத் தொழுகையின் சிறப்பை நாம் புரிந்து கொள்ள வேண்டாமா?

## எது மேலானது தஹஜ்ஜுத் தொழுகையா? ஃபஜ்ர் தொழுகையா?

ஹஜ்ரத் சுலைமான் இப்னு அபீஹத்மா (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பிறந்தவர்களா

வர். எனினும் சிறுவயதினராயிருந்தமையால் அண்ணலாரி டமிருந்து நபிமொழிகளைக் கற்றுக் கொள்ள அவர்களால் இயலவில்லை.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகு நீத்த பின்னர் இரண்டாம் கலீஃபாவாக ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொறுப்பேற்றார்கள். அவர்கள் ஹஜ்ரத் சுலைமான் இப்னு அபீ ஹத்மா (ரலி) அவர்களை கடைத் தெருவைக் கண் காணிக்கும் அதிகாரியாக நியமித்தார்கள். அவர்களும் தமக் குத் தரப்பட்ட பணியைச் செவ்வனே செய்து வந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் ஸுப்ஹுத் தொழுகைத் தொழ பள்ளிவாயிலுக்கு வரவில்லை.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுலைமான் (ரலி) அவர் களின் இல்லத்திற்குச் சென்றனர். அவர்களின் அன்னை யிடம், ''சுலைமான் (ரலி) அவர்கள் ஸுப்ஹுத் தொழு கைக்கு ஏன் வரவில்லை?'' என்று வினவினர்.

அதற்கவர், ''சுலைமான் இரவு முழுவதும் நபிலானத் தொழுகைகளைத் தொழுவதில் ஈடுபட்டிருந்தார். பின்னர் அயர்வு ஏற்பட்டு கண்ணுறங்கி விட்டார்'' என்றி கூறி னார்.

அது கேட்ட ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் ''இரவு முழுவதும் நபில் தொழுகைகளைத் தொழுவதை விட சுப்ஹுத் தொழுகையின் ஜமாஅத்தில் கலந்து கொள்வதே எனக்கு மிக்க விருப்பமானது'' என்று கூறினர்.

தம் வாழ்நாளில் ஒருமுறை கூட ஜமாஅத் தொழுகையை விட்டு விட விரும்பாத பெரியார் ஹஜ்ரத் சுலைமான் இப்னு அபீ ஹத்மா (ரலி) அவர்கள் ஒரே ஒருநாள் கண்ணயர்வு ஏற் பட்டு சுப்ஹு ஜமாஅத்தை விட்டு விட்டதையே ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் வெறுத்தார்கள் எனில் நம்நிலை என்ன?



''ஒருவர் பாங்கின் ஓசையைக் கேட்ட பின்னரும் ஜமா அத்துடன் தொழ வில்லையாயின் அம்மனிதர் நல்லவற்றை விரும்பவில்லை'' என்று ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியுள்ளனர்.

ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களோ ''எவன் ஒரு வன் பாங்கு சப்தத்தை செவியுற்ற பின்னரும் ஜமாஅத் திற்குச் செல்ல வில்லையோ அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி அவனுடைய காதில் நிரப்பி விடுவதுதான் சிறந் தது'' என்று கூறியுள்ளனர்.

பெரியார்கள், நாதாக்கள் ஆகிய இறையச்சமுள்ள நல் லடியார்கள் அனைவரும் ஜமாஅத் தொழுகையை மிக்கப் பேணுதலுடன் தொழுது வந்தார்கள். அவர்கள் சென்ற அதே நேர்வழியை நாம் பின்பற்றுவதே நம் ஈடேற்றத்திற்கு சிறந்ததாகும்.

## ஜமாஅத் தவறியதால் அழுத பெரியார்

ஹஜ்ரத் ஹாத்தமுல் அஸம் (ரஹ்) அவர்கள் மிகச்சிறந்த மகானாக விளங்கியவர்கள். அவர்கள் தம் வாழ்நாளில் ஒரு முறைகூட ஜமாஅத் தொழுகையைத் தவறவிட்டதில்லை.

எனினும் ஒருநாள் அவர்களுக்கு ஜமாஅத் தவறிவிட்டது. அது அவர்களின் உள்ளத்தை வெகுவாக பாதித்து விட்டது. ஜமாஅத் தவறியதை எண்ணி அழுதார்கள்; அழுதார்கள்; அழுதுக் கொண்டே இருந்தார்கள்.

அவர் அழுவதற்கான காரணத்தை ஒருவர் விசாரித்த பொழுது அவர்கள் ஒருவேளை ஜமாஅத் தொழுகை தவறி- விட்டதெனக் கூறினார்கள். மேலும் அவர்கள், ''என்னு டைய மகன் இறந்திருப்பின் இன்று ஏராளமானோர் என்னி டம் வந்து துக்கம் விசாரித்திருப்பர். ஆனால் ஒரு வக்த் கூட்டுத் தொழுகை (ஜமாஅத்) தவறியதற்காக எவரும் என்னி

டம் வந்து துக்கம் விசாரிக்கவில்லையே! என்னைப் பொறுத்த வரை என்மகன் இறந்திருப்பினும் நான் இந்த அளவிற்கு வருத்தப்பட்டிருக்க மாட்டேன். அவனைக் காட்டிலும் எனக்கு மேலானது ஜமாஅத்துடன் தொழுவதுதான்'' என்று கூறினார்கள்.

அவர்கள் ஜமாஅத் தொழுகைக்கு எந்த அளவுக்கு கண்ணியம் அளித்தார்கள் பாருங்கள்! அதன் உயர்வையும், சிறப்பையும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அந்த உணர்ச்சி நமக்கு வருமா?

## ஜமாஅத்தைப் பேணி நடந்த கூலிக்காரர்

ஹஜ்ரத் அபூ அப்துல்லாஹ் ஜலாஉ (ரஹ்) என்ற பெரியார் கூறுகின்றார்கள்;-

''ஒருநாள் என் அன்னை என் தந்தையை நோக்கி மீன் வாங்கி வருமாறு கூறினார்கள். என் தந்தையும் கடைத் தெருவிற்குச் சென்று மீன் வாங்கினார்கள். அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். மீனைத் தூக்கி வர, அவர்கள் ஒரு கூலியாளைத் தேடினார்கள்.

அப்பொழுது, அங்கு நின்றிருந்த ஒரு வாலிபர் எங்களை அணுகி, ''இம்மீனைத்தூக்கி வர கூலி ஆள் தேவையா?'' என்று வினவினர்.

''ஆம்!'' என்று என் தந்தையார் கூறினார்கள்.

உடனே அவ்வாலிபர் மீனைத் தூக்கித் தம் தலை மீது வைத்துக் கொண்டு எங்களுடன் நடந்தார்.

வழியில் ஓரிடத்தில் தொழுகைக்காக பாங்கு சொல்லப் படும் ஓசை கேட்டது. உடனே அவர் எங்களை நோக்கி, ''நான் உளூச் செய்ய வேண்டும். உளூச் செய்து தொழுகையை நிறைவேற்றிய பின்னரே இம்மீனை தூக்கிக்கொண்டு



வரமுடியும். தாங்கள் நான் (ஜமாஅத்) தொழுது விட்டு வரும் வரை காத்திருங்கள். இன்றேல் தாங்களே இதனைத் தூக்கிக் கொண்டு போகலாம்.'' என்று கூறி மீனை அங்கேயே வைத்து விட்டு பள்ளி வாசலுக்குச் சென்று விட்டார்.

கூலிக்கார வாலிபரின் செயலைக் கண்ட என் தந்தையார், ''கூலிக்காரப் பையன் இந்தஅளவிற்கு இறையச்சமுடன் இருக்கும்பொழுது, நாம் அவனைக் காட்டிலும் அல்லாஹ்வின் மீது அதிகமாக நம்பிக்கைக் கொள்ள தகுதியுள்ளவர்கள் அல்லவா?'' என்று எண்ணி அந்த மீன் கூடையை அவ்விடத்திலேயே வைத்துவிட்டு பள்ளிவாசலுக்குத் தொழச் சென்று விட்டார்கள்.

தொழுகை முடிந்து நாங்கள் திரும்பி வந்தோம். மீன் கூடை வைத்த இடத்தில் அப்படியே இருந்தது. பின்னர் அவ்வாலிபர் அதனைச் சுமந்து கொண்டு எங்களுடன், எங்களின் இல்லம் வரை வந்தார்.

வீட்டினுள் நுழைந்த தந்தை அவ்வாலிபரின் நிகழ்ச்சியை என் தாயாரிடம் எடுத்துரைத்தார்.

அது கேட்ட என் தாயார், ''அவ்விளைஞரை இருக்கச் சொல்லுங்கள். அவரும் மீன் சாப்பிட்டுச் 'செல்லட்டும்'' என்று கூறினார்.

இதனை அவ்விளைஞரிடம் கூறிய பொழுது, ''நான் நோன்பு வைத்துள்ளேன்'' என்று அவர் கூறினார்.

என்தாயார் அவரை நோக்கி, ''நல்லது, மாலையிலேனும் இங்கு வந்து நோன்பு திறந்து கொள்ளுங்கள்'' என்று கூறி வற்புறுத்தினார்.

அதற்கவர், ''நான் போய்விட்டு மீண்டும் திரும்பி வர இயலாது. தாங்கள் வற்புறுத்துவதால் இங்கே அருகில்உள்ள பள்ளி வாயில் தங்கி இருக்கிறேன் மாலையில் தங்கள் இல்லத்

தில் விருந்துண்டுச் செல்கிறேன்.'' என்று கூறி பள்ளிவாசலுக்குச் சென்று விட்டார்.

மாலையில், மக்ரிபு தொழுத பின்னர் அவர் வந்தார். விருந்தும் முடிந்தது. அவர் இரவில் எங்கள் இல்லத்தில் தங்கிக் கொள்ள தனிமையான ஓரிடம் அவருக்காக ஒதுக்கினோம். அங்கு அவர் தங்கிக் கொண்டார்.

எங்கள் இல்லத்தின் பக்கத்தில் ஓர் நடக்க இயலாத பெண்ணொருத்தி வசித்து வந்தாள். மறுநாள் அவளை நாங்கள் பார்த்தபொழுது அவளால் நன்கு நடக்க முடிந்தது. உடல் நிலையும் நன்றாக இருந்தது.

அது கண்டு வியப்புற்ற நாங்கள் அவளை நோக்கி, 'உனக்கு எவ்வாறு உடல்நலம் ஏற்பட்டது?'' என்று வினவியபொழுது,

''உங்கள் இல்லத்திற்கு வந்த விருந்தினரின் பொருட்டால் நான் அல்லாஹ்விடம் துஆ இறைஞ்சினேன். ''யாஅல்லாஹ்! இவ்விருந்தாளியின் பரக்கத்தால் எனக்கு உடல் நலனைத் தருவாயாக!'' என்று அல்லாஹ்விடம் கேட்டேன்.'' என்று அவள் கூறினாள்.

இதன் பின்னர் நாங்கள் அந்த இளைஞர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று பார்த்த பொழுது அங்கு அவரைக் காணவில்லை. ஆனால் கதவோ மூடப்பட்டிருந்தது. அவர் எங்கு சென்றாரோ தெரியவில்லை.

ஒருசாதாரண கூலி வேலை செய்து வயிறு பிழைத்த வாலிபரின் இறையச்சத்தையும், ஜமாஅத் தொழுகைக்கு அவர் முதலிடம் அளித்ததையும் இந்நிகழ்ச்சியில் நாம் கண்டோம். அவர் நினைத்திருந்தால் மீனைக் கொண்டு வந்து சேர்த்த பின்னர் கூட அத்தொழுகையைத் தனித்துத் தொழுதிருக்கலாம். ஆனால் அவரோ இவ்வுலகக்காரியத்தைவிட மறுமை



யின் காரியத்திற்கே முதலிடம் நல்கினார்; அந்த உறுதி நமக்கு வருமா?

## ஜமாஅத்துடன் தொழுவது இராக் நாட்டு ஆட்சியைக் காட்டிலும் மேலானது

ஹஜ்ரத் மைமூன் இப்னு மிஹ்ரான் (ரஹ்) அவர்கள் பள்ளிவாசலுக்குச் சென்று ஜமாஅத்துடன் தொழுவதைத் தம் நீங்காத வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் பள்ளிவாயிலுக்குச் சென்றபொழுது, ஜமாஅத் தொழுகை முடிந்து விட்டிருந்தது. அதுகண்ட அவர்கள் மிக்க வருத்தமுற்று, ''இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்'' என்று கூறிப் பின்னர், ''நான் ஜமாஅத்துடன் தொழுவதன் சிறப்பு எப்படிப்பட்டதெனில் எனக்கு இராக் நாட்டின் ஆட்சி கிடைப்பதைவிட மிக்க மேலானது'' என்று கூறினார்கள்.

ஹஜ்ரத் ஸயீத் இப்னு அல் முஸய்யிப் (ரஹ்) அவர்கள் ஜமாஅத் தொழுகையைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

''இருபது ஆண்டு காலமாக நான் பள்ளிவாயிலில் பாங்கு சொன்னவுடன் முதல் மனிதனாக இருந்து வருகிறேன். எனது இவ்வழக்கத்தை ஒருநாள் கூட நான் கைவிட்டதே இல்லை'' என்று கூறினார்கள்.

பார்த்தீர்களா சகோதரர்களே! நமக்கு மட்டும் தான் தொழில், வாணிபம், கடை, வேலைகள் எல்லாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

''ஏனய்யா! பள்ளிவாசல் பக்கமே வரக்காணோம்'' என்று கேட்டால், ''வேலை அதிகம் என்ன செய்வது?'' என்று எவ்வளவு அலட்சியமாக பதில் கூறுகிறார்கள்.

அல்லாஹு தஆலா இத்தகைய அலட்சியவான்களை அவர்களின் வேலையிலேயே, வாணிபத்திலேயே, தொழிலிலேயே முழு கவனத்தையும் செலுத்தி, தொழுகையின் சிந்தனையே இல்லாமற்செய்து விட்டால் மறுமையைப் பற்றிய கவலையைப் போக்கிவிட்டால் பள்ளிவாயிலின் தொடர்பையே அறுத்துவிட்டால் இவர்களின் நிலை என்ன?

நரகம்! நரகம்! நரகம்!

இந்நிலை தேவையா முஸ்லிம்களுக்கு?

நரகம் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இறைநம்பிக்கை அற்றவர்களுக்கும் அன்றோ படைக்கப்பட்டுள்ளது! அதில் முஸ்லிம்களும் போய் விழ்ந்தால் பின்னர் நமக்கும் அவர்களுக்கும் என்ன வேறுபாடும்?

இப்படிப்பட்ட நிலையெல்லாம் வராதிருக்க ஒரே வழி ஐந்து வேளையும் தவறாமல் பள்ளிக்குச் சென்று ஜமாஅத்துடன் தொழுது வருவதுதான் அதில் ஓர் உறுதிவேண்டும். வழவழா கொழ கொழா என்று இருத்தல் கூடாது.

ஹஜ்ரத் முஹம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்;

''எனக்கு இவ்வுலகில் இன்றியமையாதவை மூன்றாகும்.

1. என் குறைகளை எடுத்துரைக்கும் நண்பன்.

2. சிரமமின்றி வாழ்நாளைக் கழிக்கபோதுமான உணவு.

3. பாவங்கள் மன்னிக்கப்பட்டு அதற்குரிய நன்மைகள் கூலி வழங்கப்பெறும் ஜமாஅத் (கூட்டுத்) தொழுகை.

ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுவது அல்லாஹ்வுக்கு மிக்க விருப்பமானச் செயலாகும். அதனை நிறைவேற்றுபவரின் முன்பின் செய்த பாவங்கள் அல்லாஹ் மன்னிக்கின்றான்:



ஜமாஅத்துடன் தொழுவோருக்கு அதற்குரிய கூலியும் வழங்குகின்றான்.

இதனால் நமக்கு முன்னுண்டான பெரியார்கள் ஜமாஅத் தொழுகையை மிக்கப்பேணுதலுடன் தொழுது வந்தார்கள். தக்பீர் தஹ்ரீமா தவறிவிட்டால் கூட மூன்று நாட்கள் வரை கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். ஜமாஅத் தவறியதால் ஏழு நாட்கள் வரை அழுதுகொண்டிருந்தவர்களும் உண்டு.

ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்குத் தொழுகை நேரம் வந்தவுடன் முகத்தின் நிறம் மாறிவிடும்! உடலில் நடுக்கம் ஏற்பட்டுவிடும்.

''தங்களுக்கு ஏன் இவ்வாறு ஏற்படுகிறது'' ஒருவர் அவர்களை வினவியபொழுது,

''வானமும், பூமியும், மலைகளும் ஏற்க மறுத்த ஓர் அமானிதத்தை நிறைவேற்றும் வந்து விட்டது. அதனை நான் ஒழுங்காக நிறைவேற்றுவேனா? மாட்டேனா? என்று எனக்குத் தெரியாதே!'' என்று கூறினார்கள்.

ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் பாங்கோசையைக் கேட்டவுடன் அழுவார்கள். அழுது கொண்டே இருப்பார்கள். அவர்களின் அழுகையால் அவர்கள் அணிந்திருக்கும் போர்வைகூட நனைந்து விடும் அவ்வாறு அழுவார்கள். அதனால் அவர்களின் உடல் தளர்ந்து, கண்கள் சிவந்துவிடும்.

ஒருவர் அவர்களை நோக்கி, ''பாங்கின் ஓசையை நாங்களும் தாம் செவியேற்கின்றோம். எனினும் எங்களுக்கு எவ்வித உணர்ச்சியும் உண்டாகவில்லையே! தாங்களே இந்த அளவிற்கு அஞ்சி நடுங்குகிறீர்களே!'' என்று வினவிய பொழுது,

''பாங்கு சொல்பவர் என்ன சொல்கிறார் என்பது மக்களுக்கு விளங்கினால் அவர்கள் உல்லாசம் ஓய்வு ஆகியவற்றை வெறுத்துவிடுவார்கள்; உறக்கத்தை துறந்துவிடுவார்கள்'' என்று கூறி பாங்கின் ஒவ்வொரு வாசகத்திற்கும் உரிய பொருளை விளக்கினார்கள்,

உண்மையில் பாங்கில் இடம் பெற்றுள்ள ஹய்ய அலஸ்ஸலாத் (தொழுகைக்கு வாருங்கள்) ஹய்ய அலல் பலாஹ் (வெற்றி பெற வாருங்கள்) என்ற வாசகங்கள் எத்துணைப் பொருள் பொதிந்தவை!

ஒரு மனிதர் பள்ளிவாயிலுக்குச் சென்று ஜமாஅத்துடன் தொழுதால் அவர் வெற்றி பெறுவது நிச்சயம்!

எதில்? லாட்டரி சீட்டுக் குலுக்கலிலா? குதிரை ரேசிலா? சீட்டுக்கட்டிலா? தேர்தலிலா? ஒருவனை ஒருவன் ஏமாற்றுவதிலா? உலகக் காரியங்களிலா? இல்ல, இல்லை; மறுமையில். மறுமையில் அவர் இறையருளால் வெற்றி பெறுவார்; நரகம் என்ற பெருந்துன்பத்தை விட்டு நீங்குவார்; வெற்றி பெறுவார்; அதைக்காட்டினும் பெரிய வெற்றி எது? அவருக்குக் கூலியாக அல்லாஹ் சுவனம் என்னும் அழியாத இன்ப நிலையை வழங்கி கண்ணியப்படுத்துவான்.

ஜமாஅத்தைப் புறக்கணித்துப் பள்ளிவாசலின் பக்கம் தலைகாட்டாமல் கட்டுக்கட்டாகப் பணத்தை எண்ணுவதில் குறியாய் இருந்தவர்கள் நரக நெருப்பில் வாடிவதங்க,

ஏழையே ஆயினும் ஜமாஅத்தை கண்ணியப்படுத்தி பள்ளிவாயிலை அடைந்து ஐந்து வேளையும் கூட்டுத்தொழுகையை நிறைவேற்றிய நல்லடியார் சுவனப் பேரின்பத்தை நுகர்வார், மகிழ்வார்.

ஜமாஅத்துடன் தொழாதவர் நரகவாசியா?

ஆம் நரகவாசிதான்; நாம் கூறவில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்.



ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:

''பகலெல்லாம் நோன்பு நோற்றும், இரவெல்லாம் நின்று தொழுதும் (எனினும்) ஜமாஅத்துடன் தொழ வராமலும் இருப்பவர் பற்றி (என்னிடம்) வினவப்பட்டதற்கு நான், 'அவர் நரகவாசிகளில் உள்ளவராவார்' என்று கூறினேன்''

நூல்: திர்மிதி.

## ஜமாஅத்தை விட்டவருக்கு சவுக்கடி

நேர்வழி பெற்ற கலீபாக்கள் என்று அழைக்கப்பெறும் ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) உமர் (ரலி) உஸ்மான் (ரலி) அலீ (ரலி) ஆகியோருக்குப்பின் ஹஜ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதிலும் அவர்கள் கலீபா என்றோ நேர்வழி பெற்ற கலீபா என்றோ அழைக்கப்படவில்லை. அமீர் முஆவியா (ரலி) என்றே அழைக்கப்பட்டனர்.

இஸ்லாமிய வரலாற்றில் மன்னராட்சியைத் தோற்றுவித்தவரும் முதல் மன்னரும் அவர்களே ஆவர். அவர்களுக்கு பின்னர் பலர் இஸ்லாமிய மன்னராக விளங்கிய போதிலும் முன்னோரான நாற்பெருங்கலீபாக்களின் அந்தஸ்தைப்பெற இயலவில்லை. ஏனென்றால் அவர்கள் அனைவரும் உலக அலங்காரங்களிலும் வீண் விளையாட்டுகளிலும் மூழ்கியதே ஆகும்.

உமையயா கிலாஃபத்தில் அநியாயமும், அக்கிரமும் நிறைந்து மக்கள் சாறாய் பிழியப்பட்ட வேளையில் அல்லாஹ் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) என்னும் உண்மையாளரை நேர்மையாளரை முஸ்லிம் உலகுக்கு ஈந்தான். அம்மாண்பாளரே நேர்வழிபெற்ற கலீபாக்களின் ஐந்தாமவராக கணிக்கப்படுகிறார். இறையச்சமுள்ள அப்பெரியார் உமைய்யா கிலாபத்தில் ஆட்சிப்பொறுப்பேற்று,

முன்னோர்களின் நல்லாட்சியை மீண்டும் மலரச் செய்தார்கள். அவர்களின் செயல்கள் அனைத்தும் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களை முற்றிலும் ஒத்திருந்தமையால் அவர் இரண்டாம உமர் என்றும் அழைக்கப்பெற்றார்கள்.

''கலீஃபா வலீத் இப்னு அப்துல் மலிக்கின் காலத்தில் மக்கள் கட்டிடங்களைப் பற்றியும் கட்டிடக் கலையைப் பற்றியும் பேசிக் கொண்டனர். கலீஃபா சுலைமான் இப்னு அப்துல் மலிக்கின் காலத்தில் மக்கள் வகை வகையான உணவு சமைப்பது பற்றியும், பெண்களைப் பற்றியும், விருந்துகளைப் பற்றியும் பேசிக் கொண்டனர். கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் காலத்தில் மக்கள் தொழுகைகளைப் பற்றியும், கட்டாயமான அதிகப் படியான வணக்கங்களைப் பற்றியும் பேசலாயினர்'' என்று எழுதியுள்ளனர். அத்தகு சிறப்பு மிகு ஆட்சியை உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் வழங்கினார்கள்.

ஜமாஅத் தொழுகையை மிக்கப் பேணுதலுடன் தொழுது வந்த, அவர்கள், மக்கள் அனைவரும் அவ்வண்ணமே தொழுது வரவேண்டும் என பெரு முயற்சி செய்தார்கள்.

இவர்கள் தம் மக்களுள் ஒருவரை ஒரு சிற்றூரிலுள்ள மத்ரஸாவிற்கு கல்வி பயில அனுப்பினார்கள். அவர் அங்கேயே தங்கியிருந்து கல்வி பயின்று வந்தார்.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தம் மகனாரின் ஒழுக்க நிலைகளைக் கண்காணிக்க இரகசிய ஆட்களையும் நியமித்திருந்தார்கள்.

ஒருநாள் கலீஃபாவின் புதல்வர் சவரம் செய்து கொள்ளும் அலுவலில் ஈடுபட்டிருந்தார். அதனால் அவருக்கு அஸர் தொழுகையின் ஜமாஅத் தவறிவிட்டது.

பிறகு என்ன?



இச்செய்தி காற்று வேகத்தில் தந்தையாரின் செவிகளைச் சென்றடைந்தது.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கொதித்தெழுந்தார்கள். உடனே அவர்கள் மத்ரஸாவின் ஆசிரியருக்கு ஓர் மடல் வரைந்தார்கள். அதில்:—

''அஸர் தொழுகையின் சிறப்பை உணராது என்மகன் அதன் ஜமாஅத்தை தவறவிட்டு விட்டான். சவரம் செய்வதில் ஈடுபட்டதால் ஜமாஅத் தவறியதாகக் கேள்விப்பட்டேன். அதற்கு தண்டனை அளிப்பது என் மீது கடமையாகும். இதோ இக்கடிதத்துடன் ஓர் சவுக்கையும் அனுப்பியுள்ளேன். நீங்கள் என்னுடைய பிரதிநிதியாக இருந்து இச்சவுக்கால் அது பஞ்சு பஞ்சாகும் வரை அவனை அடியுங்கள். இனியேனும் இது போன்ற தவறு நேராது பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று எழுதியிருந்தார்கள்.

அவர்களின் ஆணை நிறைவேற்றப்பட்டது. ஒரே ஒரு வக்த் ஜமாஅத்தைத் தவறவிட்ட அவர்களின் மகனாருக்கு சவுக்கடி கொடுக்கப்பட்டது.

ஜமாஅத்தை முற்றிலும் புறக்கணித்து, அவன் சரியில்லை; இவன் சரியில்லை; அவன் பின்னால் தொழமாட்டேன்; இவன் பின்னால் தொழ மாட்டேன் என்று கூறி பாங்கோசை செவியிற்படும் எல்லைக்குள்ளேயே இருந்தும், வீட்டில் தனித்து தொழும் மடையர்களுக்கு என்ன தண்டனை அளிப்பது; நரக நெருப்பு தானோ! அல்லாஹ் காக்க வேண்டும்.

பெருமையின் காரணத்தாலேயே மக்களுள் சிலர் தம்மை மிக உயர்வாகக் கருதிக் கொண்டு சிறப்பு மிகுந்த ஜமாஅத் தொழுகையைத் தவற விட்டு விடுகின்றனர். அவர்கள் இனியேனும் திருந்த வேண்டும்.

## அல்லாஹ்வின் அழைப்பும் அய்யூப்கானின் அழைப்பும்

அய்யூப்கான் பாகிஸ்தானின் அதிபராக இருந்தவர் என்பது அனைவரும் அறிந்ததே! 1958 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தாமல் இராணுவப் புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றி பாகிஸ்தானின் அதிபராக ஆனவர்.

அவருடைய தந்தை மார்க்கப்பற்றுள்ளவர். நள்ளிரவில் எழுந்து 'தஹஜ்ஜுத்'தொழுகை தொழும் வழக்கமுடையவர்.

இளமையில் அய்யூப்கான் திருக்குர்ஆன் மனனம் செய்வதற்காக அரபி பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். எனினும் அது அவருக்குப் பிடிக்காமல் ராணுவக் கல்லூரிக்குச் சென்று போர் முறைகளைப் பயின்றார்.

1928-இல் இந்திய இராணுவத்தில் சேர்ந்தார். 1947 பிரிவினைக்குப்பின் பாகிஸ்தான் சென்று 'கர்னல்' ஆனார். பின்னர் பாகிஸ்தானின் தளபதியாகவும், அமைச்சராகவும், உயர்ந்து அதிபர் ஆனார்.

இராணுவக் கெடுபிடிகளில் அவர் ஈடுபட்டிருந்த போதிலும், இயல்பிலேயே அவர் மார்க்கப்பற்றுடையவராக இருந்தார். ஐவேளைத் தொழுகைகளைப் பேணுதலுடன் தொழுது வந்த அவர், அவற்றைப் பெரும்பாலும் ஜமாஅத்துடன் நிறைவேற்றி வந்தார்.

ஒருமுறை அவர் ஒரு சிற்றூருக்குச் சென்றார். அங்கு ஒரு பள்ளிவாயில் இருந்தது. தொழுகையின் வேளை வரவே ஜமாஅத்துடன் தொழ எண்ணி பள்ளிவாயிலுக்குச் சென்றார். அங்கு முஅத்தினைத் தவிர்த்து, வேறெவரையும் காணவில்லை.

உடனே அய்யூப்கான், முஅத்தினை நோக்கி, ''பாங்கு சொல்லப்பட்டு விட்டதா?'' என்று வினவ,

அவர், ''ஆம்!'' என்றுரைத்தார்.



அதுகேட்ட அதிபருக்கு வியப்பு மேலிட்டது, ''பாங்கு சொல்லப்பட்ட பின்னரும், வக்த் வந்த பிறகும் தொழுகைக்கு எவரும் வரவில்லையே!'' என்று வினவ,

அதற்கு முஅத்தின், ''இவ்வூர் மக்கள் இப்பொழுது அவரவர் அலுவல்களில் ஈடுபட்டிருப்பார்கள். அதனால் பகலில் பள்ளிக்குத் தொழ வரமாட்டார்கள்'' என்று கூறினார்.

அதிபர் அய்யூப்கானோ அதுவரைத் தம்மை எவரென முஅத்தினுக்குத் தெரிவிக்காமலேயே பேசிக் கொண்டிருந்தார். திடீரெனத் தாமே பாகிஸ்தானின் அதிபர் என்பதை அவரிடம் எடுத்துரைத்து அவ்வூர் வாசிகளை அழைத்து வருமாறு ஆணையிட்டார்.

அவர் தாம் அதிபர், என்பதை உணர்ந்த முஅத்தின் அதற்குமேல் நொடிப்பொழுதும் அங்கு நில்லாமல் விரைந்தோடினார், சற்று நேரத்தில் ஊர்வாசிகள் அனைவரும் பள்ளிவாயிலுக்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தனர்.

அப்பொழுது அய்யூப்கான், அவர்களை நோக்கி, ''சற்று நேரத்திற்கு முன் அல்லாஹ் உங்களை அழைத்தான். அப்பொழுது நீங்கள் பள்ளிக்கு வரவில்லை. இப்பொழுது அல்லாஹ் அடிமைகளில் மிகச் சிறியவனான அய்யூப்கான் அழைத்ததும் விரைந்தோடி வருகிறீர்களே!'' என்று கூறி அவ்வூர் வாசிகளை இடித்துரைத்து, ''இனியேனும் ஒழுங்காக வேளா வேளைக்கு பள்ளிவாயிலுக்கு வந்து ஜமாஅத் தொழுகையில் கலந்து கொள்ள வேண்டும். மார்க்கத்தை ஒழுங்காகப் பேணி வரவேண்டும்'' என்று கூறி அறிவுறுத்தினார்.

மக்களின் மனநிலையும், செயல்முறைகளும் இன்று இவ்வாறுதான் உள்ளது.

அல்லாஹ் எங்கோ வானத்தின் மீது உள்ளான்; நம் செயல்களை அவன் காண்பதில்லை என்பதாக ஒருசிலர் எண்

ணிக் கொண்டுள்ளனர். ஆனால் அல்லாஹ்வோ, மனிதனின் பிடரி நரம்பைக் காட்டிலும் சமீபமாகவே தான் உள்ளதாகக் கூறுகின்றான்.

ஒவ்வொரு அணுவின் அசைவை உற்றுநோக்கியவனாக வும் ஓசைகளைச் செவியுறுபவனாகவும் அவன் உள்ளான்.

அவ்வாறிருக்க பள்ளிவாயிலில் பாங்கு சொல்லப்படுவது எவருக்கோ என்பது போல் முஸ்லிம்களில் ஒரு சிலர் எண்ணிக் கொண்டுள்ளனர். எனவே அல்லாஹ்வின் அழைப்பாகிய பாங்கோசையை அலட்சியம் செய்கின்றனர். மிகப்பெரிய வனும், குற்றவாளிகளைத் தண்டிப்பதில் மிகப்பெரியவனும் ஆகிய அல்லாஹ்வுக்கு அஞ்சுவதில்லை.

ஆனால் அதிகாரம் படைத்த எவரேனும் போய் மிரட்டி ''போடா, போய்த் தொழு'' என்று கூறினால் அம்மனிதருக் காகத் தொழுகின்றனர். என்னே மனிதனின் அறிவீனம்!

## ஜமாஅத்தை இழிவுபடுத்தும் தூங்கு மூஞ்சிகள்

சில பள்ளிவாசல்களில் நிர்வாகம் சரிவர நடைபெறுவதே இல்லை. காரணம் அம்மஹல்லாவாசிகள் மார்க்கப்பற்றில் லாதவர்களை முத்தவல்லிகளாகவும், நிர்வாகிகளாகவும் நிய மித்து விடுவதே ஆகும். பணக்காரர்கள் அடாவடிப் பேர்வழி கள் சிலர் தாங்களே முத்தவல்லிகளாக இருந்து அதிகாரம் செலுத்துகின்றனர். தொழ வருபவர்களை ஈக்களாகவும், கொசுக்களாகவும் எண்ணிக்கொள்கின்றனர்.

ஒரு பள்ளிவாசலின் நிர்வாகியின் வீடு, பள்ளிவாசலை ஒட்டியே உள்ளது. எனினும் அந்த ஆள் பள்ளிக்கு வரவும் மாட்டார்; தொழவும் மாட்டார்; அத்திப்பூத்தாற்போல் என் றேனும் ஒருநாள் ஜமாஅத் தொழுகையில் கலந்துகொண்டு தமக்குண்டான அதிகாரங்களை செலுத்துவார்; தொண்டை கிழியக் கத்திப் பேசுவார்.



ஒரு பள்ளிவாயிலில் ஜமாஅத் தொழுகை நடந்துகொண் டுள்ளது. நிர்வாகியோ கட்டிட மேஸ்திரிக்கு கட்டிட பிளான் கூறிக்கொண்டுள்ளார். ஏன் அந்த ஜமாஅத்தைக் தொழுது விட்டுப் பிறகு அதன் மேஸ்திரிக்கு விளக்கக் கூடாதா? மேஸ் திரி ஓடி விடுவாரா? அந்த அளவிற்கு அந்த நிர்வாகி தொழு கையில் பேணுதல்!

எனக்குத் தெரிந்த ஒரு பெரிய மஹல்லாவின் முத்தவல்லி வட்டிக்கு பணம்கொடுத்து ஹராமான வருமானத்தை சம்பா திப்பவர்.

ஒரு பள்ளிவாசலின் நிர்வாகி கடத்தல் பொருள்களை வாங்கிவிற்பவர். அவர் ஜமாஅத் தொழுகை நடக்கும்பொழுது தான் பள்ளிவாயிலின் அருகில் உள்ள தம் வீட்டின் வெளித் திண்ணையில் அமர்ந்து வாடிக்கையாளர்களுடன் வாணிபம் செய்வார். அதுபற்றி அவரிடம் எவரேனும் கூறிவிட்டால் ஆத்திரம்கொண்டு ஆடுவார்.

ஆடுவதிலோ, ஆத்திரம்கொள்வதிலோ அடாவடித்தனம் செய்வதிலோ பயன் இல்லை. அவர் பணக்காரர் என்ப தாலோ அந்தப் பள்ளிவாசல் கட்ட பெருமுயற்சி செய்தவர் என்பதாலோ அவரை அல்லாஹ் சுவனத்தில் சேர்த்துவிட மாட்டான். எவராயிருப்பினும் தன்னுடைய சுயநலத்தின் பொருட்டும், உலக ஆதாயத்திற்காகவும் வேண்டுமென்றே ஜமாஅத்தொகையைப் புறக்கணித்திருப்பின் அதற்காக அல்லாஹ்விடம் பதில் சொல்லியே ஆகவேண்டும். ''நானே முத்தவல்லி; என்னை எவன் எதிர்த்துப் பேசுபவன்?'' என் றெல்லாம் அவர்கொள்ளும் எண்ணம் அல்லாஹ்விடம் தவிடு பொடியாகிவிடும்'' என்பதை இத்தகைய பெருமைக்காரர்கள் புரிந்துகொள்ளட்டும்.

சில ஊர் பள்ளிவாயில்களில் எந்நேரமும் சிலர் தூங்கிக் கொண்டே இருப்பார்கள். பாங்கு சொல்லப்படும்பொழுது எழுந்து உட்காருவார்கள். மய்யித் எழுந்து உட்கார்ந்தது போன்றிருக்கும். பாங்கு சொல்லி முடித்தவுடன் மீண்டும்

பிணமாகி விடுவார்கள்: அதாவது கட்டையை நீட்டிவிடுவார் கள்! ஆம் தூங்கிவிடுவார்கள்.

நான் ஒரு ஊருக்குச் சென்றிருந்தேன். அவ்வூரின் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. தமிழகத்தின் முஸ்லிம் நிறைந்த பெரிய ஊர்களில் அதுவும் ஒன்று. அங்குள்ள ஒரு பள்ளிவாசலில் ஐந்தாறு பேர் அதாவது முஸ்லிம்கள் தூங்கிக்கொண்டிருந்தனர். தொழுகைக்காக பாங்கு சொல்லப்பட்டது. இரண்டுபேர் எழுந்து உட்கார்ந்தனர். மீதியுள்ளவர்களை எழுப்பியபொழுது அவர்கள் எங்களைத் திட்டிக்கொண்டே எழுந்து உட்கார்ந்தனர். பாங்கு சொல்லி முடித்தவுடன் அத்தனை பேரும் மீண்டும் கட்டையை நீட்டி விட்டனர்.

ஜமாஅத்திற்காக இகாமத் சொல்லும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுதும் அவர்கள் தூங்கிக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் நான் போய் எழுப்பிய பொழுதே அவர்கள் எழ மறுத்ததுடன் என்னைக் கண்டபடித் திட்டினர்.

''தொழுகையில்லாதவருக்கு பள்ளிவாசலில் என்னய்யா தூக்கம்? சத்திரமா இது?'' என்று கேட்ட பொழுது,

''நீ யார் கேட்கிறது? உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போயா! பெரிசா வந்துட்டே!'' என்று கூறி என்னை ஏசினர்.

அப்பொழுது அவ்வூரைச் சேர்ந்த ஒருவர், ''அவர்கள் அப்படித்தான் விடுங்கள்!'' என்றார்.

உடனே நான் ''என்னய்யா ஜமாஅத்தை இழிவுபடுத்தும் இந்த தூங்கு மூஞ்சிகளை விரட்டியடிக்கவோ அல்லது தொழுகைக்கு அழைக்கவோ உங்களால் முடியவில்லையா?'' என்று கூறினேன்.



உடனே அவர் ''இந்த ஊர் அப்படித்தான்!'' என்றார்.

பள்ளிவாயிலின் நிர்வாகம் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? பள்ளிவாயில் திண்ணைத் தூங்கி பையன்களுக்காக உள்ளதா?

இந்த தரித்திரங்களை, பீடைகளை, அழுக்கு மூட்டைகளை விரட்டியடித்து வணக்கத்திற்குரிய இடமாக அப்பள்ளியை உருவாக்க அதன் நிர்வாகி முன்வரவில்லை! காரணம் அதில் அவருக்கு ஈடுபாடு இல்லை. அதற்குத்தான் மார்க்கப்பற்றுள்ளவரை, ஈடுபாடுள்ளவரை பள்ளியின் நிர்வாகியாக நியமிக்கவேண்டும் என்பது.

## ஜமாஅத் தொழுகைமீது கடமை?

1. ஜமாஅத் தொழுகை ஆண்கள்மீது வாஜிப் ஆகும். பெண்களுக்கு வாஜிபு ஆகாது.

— ரத்துல் முக்தார்-துர்ருல் முக்தார்

2. பருவ வயது அடைந்தவர்மீது வாஜிபு ஆகும், பருவம் அடையாதவர்மீது வாஜிபு இல்லை.

3. அடிமைமீது ஜமாஅத் வாஜிபு ஆகாது: சுதந்திரமானவன் மீதே வாஜிபு. (அரசு அலுவலகத்தில் சம்பளத்திற்குப் பணிபுரிபவனோ, தனியார் துறையின் ஊழியனோ அடிமை ஆகமாட்டான்.)

4. மழை, காற்று, சேறு, சகதி, இருள், நோய்போன்ற சங்கடங்கள் இல்லாதவர்மீது வாஜிபு ஆகும். மேற்சொன்ன சங்கடங்கள் இருப்பின் அவருக்கு ஜமாஅத் வாஜிபு ஆகாது. எனினும் அவர் ஜமாஅத்துடன் தொழுவதே சிறந்தது.

... ரத்துல் முக்தார்

# ஜும்ஆ தொழுகையின் சிறப்புகள்

## ஜும்ஆ என்றால் என்ன?

வெள்ளிக்கிழமைக்கு 'யவ்முல் ஜும்ஆ' என்று பெயர். அல்லாஹுத் தஆலா அனைத்தையும் ஒன்று சேரப் படைத்து அகிலத்தின் அமைப்பு வேலையை இன்றுதான் நிறைவு செய்ததால் இதற்கு ஜும்ஆ என்று பெயர் வந்ததாகக் கூறுவர். இதற்கு 'யவ்முல் மஸீத்' என்ற பெயரும் உள்ளது.

அல்லாஹ் அகிலத்தின் உற்பத்தியைச் சனிக்கிழமை துவக்கி ஆறு நாடகளில் முடித்தான் என்றும் அதோடு இது அதிகமாகச் சேர்க்கப்பட்டு ஏழாவது நாளாக ஆனதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இதற்கு 'யவ்முல் ஹர்பா' (சண்டை நாள்) என்றும் பெயர் உள்ளது. ஒருவன் தன் மனோ இச்சையோடு போர் செய்யும் அதாவது தன் பாவம் நினைந்து வருந்தி மன்னிப்புக் கோரும் நாளாதலால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

இதற்கு 'யவ்முல் அரூபா' (சந்தை கூடும் நாள்) என்றும் பெயர் உள்ளது. காரணம் முற்காலத்தில் இந்த நாளில் தான் அரபு நாட்டில் சந்தை கூடி வந்தது. இதற்கு ,சையிதுல் ஐயாம்' (நாட்களின் நாயகம்) என்ற பெயரும் உண்டு.

''பொழுது புலரும் நாட்களிலெல்லாம் (ஜும்ஆ நாளே) இதுவே மாண்புடையது'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.



## ஜும்ஆ தொழுகையின் சிறப்புகள்

ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

''எவர் வெள்ளியன்று முழுக்கக் குளியலைக் குளித்துப் பின்னர் (முன்) நாழிகையில் ஜும்ஆவிற்கு (பள்ளி) செல்கின்றரோ அவர் ஓர் ஒட்டகத்தைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். அன்றி எவர் மறுநாழிகையில் செல்கின்றாரோ அவர் ஒரு மாட்டைக் குர்பானி கொடுக்தவர் போலாவார். தவிர எவர் மூன்றாவது நாழிகையில் செல்கின்றாரோ அவர் ஓர் ஆட்டைக் குர்பானி கொடுத்தவர் போலாவார்; மேலும் எவர் நான்காவது நாழிகையில் செல்கின்றாரோ அவர் ஒரு கோழியைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். பின்னும் எவர் ஐந்தாவது நாழிகையில் செல்கின்றாரோ அவர் ஒரு முட்டையை குர்பானி கொடுத்தவர் போலாவார். இமாம் (குத்பா ஓத) புறப்பட்டு விட்டால் வானவர்கள் தோன்றி குத்பாவை செவியுறுவர்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

ஆதாரம்; புகாரீ, முஸ்லிம், முஅத்தா, அபூதாவூத், திர்மிதீ, நஸயீ

ஜும்ஆ தொழுகை எத்தனை சிறப்பிற்குரியது பாருங்கள். ஜும்ஆ அன்று முஸ்லிம்கள் அனைவரும் குளித்துத் தூய்மையாகி இறையில்லத்தில் ஒன்றுகூடி ஜமாஅத்தாக தொழுவதும் குத்பாவை செவியுறுவதும் கடமையாகும். பெண்கள் மீது ஜும்ஆ கடமையில்லை. வாரத்திற்கொருமுறை (ஜும்ஆவில்) கூட பள்ளிக்கு வந்து ஜமாஅத்தில் கலந்துகொள்ளாதவன் மிக்கத் தீயவன்; பாவி என்பதில் ஐயமில்லை.

## ஜும்ஆ யார்மீது கடமை?

ஹஜ்ரத் தாரிக் இப்னு ஷிஹாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றனர்:

''ஜுமுஆத் தொழுகை ஒவ்வொரு முஸ்லிம்மீதும் ஜமா அத்தாகத் தொழுதல் கடமையாகும். நால்வரைத் தவிர்த்து (அவர்கள்) 1. அடிமை 2. பெண் 3. சிறுவர் 4. நோயாளி ஆகியோராவர்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல்: அபூதாவூத்

மற்றொரு நபிமொழி பின்வருமாறு:

''பருவம் அடைந்த ஆண்கள் அனைவர் மீதும் ஜுமுஆ கடமையாகும். அன்றி ஜுமுஆவிற்குச் செல்லும் அனைவர் மீதும் குளியல் கடமையாகும்.

அறிவிப்பவர்; ஹஜ்ரத் ஹஃப்ஸா (ரலி)
நூல்; அபூதாவூத், நஸயீ

## ஜுமுஆவை விடுவதன் கேடுகள்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; ''எவர் மூன்று ஜுமுஆக்களை (யாதொரு நோயுமின்றி சோம்பலாக விட்டு விடுகின்றாரோ அவருடைய மனத்தில் அல்லாஹ் முத்திரையிட்டு விடுகிறான்.''

அறிவிப்பவர்: அபூ ஜஃதல் ளமீரிய்யி
நூல்: ஸுனன்

மேலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாவது:

''எவர் எவ்வித சங்கடமுமின்றி ஜுமுஆவை விட்டு விடுகிறாரோ அவர் ஒரு தீனார் தர்மம் செய்யவும். அவர் ஒரு தீனாரைப் பெற்றிருக்கவில்லையெனில் அரை தீனார் தர்மம் செய்யவும்.''

அறிவிப்பவர்: ஸமுரதுப்னு ஜுன்துப் (ரலி)
ஆதாரம்: அபூதாவூத், நஸயீ

—★—